சொல்லே, சொல்லின் உறைந்துள்ள சுவையான பொருளே, உய்க்கின்ற அமுதில் உள்ள சுவையே, நல்லவர்கள் மனதில் இருக்கின்ற ஒளி வீசும் மாணிக்கமே, வாசமுள்ள மெண்மையான கூந்தலை உடைய இளமையான பெண் யானையைப் போன்றவளே, எல்லாம் வல்ல சோமநாதசாமி என்ற மரத்தைத் தழுவியிருக்கும் கொடியே, என்னுடைய பாவ வினைகளை நீக்கி அருள் செய்ய உன்னுடைய அழகிய திருவடிகளை தந்தருள்வாயே.

12. காட்டில் குறத்திதனை வேட்ட கந்தக் கடவுள் தனக்கு அமுதம்
ஊட்டி வளர்க்கும் பெருங்கருணை உமையே உபய சரண மலர்
விட்டில் எளியேன் தனை இருத்த மெய்ஞ்ஞானத்தை உதவ வரும்
நாட்டம் சிறிது வைத்தருளாய் நலமார் ஆறைப் பதியாளே.

<u>பொருள்:</u> வேட்ட - விரும்பிய, உபயம் - அடைக்கலம், நலமார் - நலமுடன் விளங்கும்.

சிறப்பு வாய்ந்த ஆத்தூரில் வீற்றிருக்கும் தாயே, காட்டில் வள்ளிக் குறத்தியை விரும்பி மணங்கொண்ட கந்தக் கடவுளுக்கு அமுதம் ஊட்டி வளர்த்த உமையே, அடைக்கலம் தரும் உன் திருவடிகளின் கீழ் சரணடையும் எளியவனுக்கு மெய்ஞானத்தை அடையும் விருப்பத்தை சிறிது தந்தருள்வாயே.

13. பதியாய் இருந்து பசுக் கடமைப் பந்தித்திருக்கும் பாசமலம்
உதிர்வான் புவன தனு கரண போகம் உதவும் பரசிவனைத்
துதியா வாழ்த்தும் தொண்டன் எனத் தூய கதியில் தொகுத்து அருளாய்
குதியா வாளை மடை இரியும் குளமார் ஆறைக் கோமளமே.

<u>பொருள்:</u> பதி- இறைவன், பதியாய் இருந்து – உயிர்கள் மீது அவற்றின் தலைவனாகக் கருணையுடன் இருந்து, பசுக் கடமை - உயிர்களை, பந்தித்திருக்கும் - கட்டப்பட்டிருக்கும், பாசமலம் - ஆணவம் கன்மம் மாயை ஆகிய மலங்கள், உதிர்வான் - நீங்குவதற்கு, புவன - உலகம், தனு - உடம்பு, கரண - கருவிகள் (மனம் புத்தி அகங்காரம் சித்தம்), போகம் - உலகத்தில் அனுபவிக்கக் கூடிய பொருட்கள், பரசிவனை- மேலான சிவனை, கதி - நெறி, குதியா வாளை மடை இரியும் குளம் - வாளை மீன்கள் குதித்து விளையாடும் மடைகள் உள்ள குளம், குளமார் - குளங்கள் நிறைந்த.

வாளை மீன்கள் குதித்து விளையாடும் குளங்கள் நிறைந்த ஆத்தூரில் வீற்றிருக்கின்ற கோமளமே, இந்த உலக அனுபவங்களை உடல் கொண்டு மனம், புத்தி, அகங்காரம், சித்தம் முதலியவற்றால் துய்க்கும் பசுக் கடமையால் கட்டுண்டிருக்கும் நான், பதியாய் இருந்து ஆனவம், கன்மம், மாயை

என்னும் பாச வலையை அறுக்கும் பரசிவனை துதித்து வாழ்த்தும் அடியனுக்கு நல்ல நெறியைக் காட்டி அருள்வாய்.

14. **கோமேதகமே வாலுகத்தில் கோத்து விளைந்த குளிர்முத்தே**
தாமே தடுத்து ஆட்கொண்டதினால் தாசி மனைக்குத் தூதாகப்
போமாறு இசைந்த சோமேசர் பொன்தோள் மருவும் சமயமதில்
ஆமாறு அடியேன் பொருட்டாக வன்பார் மொழி ஒன்று அறையாயே.

<u>பொருள்:</u> வாலுகத்தில் - மணற்பரப்பில், அன்பார் - அன்பு நிறைந்த, (அல்லது வன்பார் - பாலைநிலம்
பாலையில் தவிக்கும் எனக்கு).

கோமேதகமே, கரையில் தவழ்ந்து பட்டாளம் தங்கும் இடம் போல பரந்த மணற்பரப்பில் விளைந்த குளிர்ந்த முத்தே, தானாகவே தடுத்து ஆட்கொண்ட சுந்தரருக்காக தாசி (பரவை நாச்சியார் - பதியிலார் குலத்தில் பிறந்ததனால் "தாசி" என குறிப்பிட்டுள்ளார்) வீட்டுக்கு தூது போக சம்மதித்த சோமநாதசாமியின் பொன் போன்ற தோள்களை நீ தழுவும் போது, என் வேண்டுகோள் நிறைவேறுமாறு (ஆமாறு), என் பொருட்டு, அன்பு நிறைந்த மொழிகள் பேசுவாயே.

15. **அறையும் பெரியார் அருட்பாடல் அமுதம் பருகும் திருச்செவிக்குச்**
சிறியேன் பனுவல் கைத்திடுமோ திங்கள் கடவுளுக்கு இடர் களையும்
இறைவன் மணக்கும் பொற்கொடியே எழிலார் சோமசுந்தரியே
மறையும் அறிதற்கு அரியாளே மனத்தின் பான்மை அறியேனே.

<u>பொருள்:</u> அறையும் - ஓங்கி உரைக்கும், பனுவல் - உரை, கைத்திடுமோ – கசக்குமோ,
திங்கள் கடவுளுக்கு இடர்களையும் - முனிவர் சாபத்தால் கலை இழந்த சந்திரனின் குறையைப் போக்கித் தன் தலை முடியில் சிவன் வைத்தார்; அவன்தேய்ந்து வளரும்படி அருள் செய்தார்,
மறையும் அறிதற்கு அரியாளே - வேதங்களாலும் உணரப்பட முடியாதவள், பான்மை - தன்மை.

திருத்தொண்டர் பாடிய ரீங்காரமிடும் அமுதம் போன்ற அருட் பாடல்களை ரசிக்கின்ற உன் திருச்செவிக்கு, சிறியவனாகிய என் பாடல் கசக்குமோ? முனிவர் சாபத்தால் கலையிழந்த சந்திரனுக்கு அருள் செய்த ஈசன் மணக்கும் அழகிய பொற்கொடியே, சோமசுந்தரித் தாயே, வேதங்களாலும் அறிவதற்கு அரியவளே என்னுடைய மனம் போகிற போக்கை அறிய முடியாமல் தவிக்கிறேன்.

16. **அறிவே தானாய் உலகம் முதல் அண்டப் பரப்பு இங்கு அத்தனையும்**
நிறையும் உயிர்க்குத் தாரகமாய் நிற்கும் உனது திருக்கோலம்
அறியாப் பேதை நினது ஆற்றல் அறியும் தரத்தேன் ஆவேனோ
பொறி வண்டுழக்கும் பூங்கோதாய் பொழிலார் ஆறைப் பொலன் கொடியே.

<u>பொருள்:</u> அறிவே தானாய் - ஞானமே வடிவாய், உலக முதல் அண்டப்பரப்பு - பிரபஞ்சம் முழுவதும், தாரகமாய் - பேணிப் பாதுகாக்கும் துணையாய், உழக்கும் - வருந்தும், பொழிலார் - சோலைகள் சூழ்ந்த, பொலன் - பொன்னிறம்.

ஞானமே வடிவமாய் இந்த உலகம் முதல் அண்டப் பரப்பு அத்தனையும் தன்னகத்தே கொண்டிருக்கும், எல்லா உயிர்களையும் பேணிப் பாதுகாக்கும் துணையாய் இருப்பவளே உனது இந்த உண்மை உருவை அறிந்து கொள்ள முடியாத பேதையால், மலர் மொட்டில் புகுந்து வருந்தும் வண்டைப் போன்ற நான், உன் ஆற்றலை அறிந்து கொள்ளும் தகுதி பெற்றவன்

ஆவேனோ? பொழில்கள் சூழ்ந்த ஆத்தூரில் உறையும் பொன் போன்ற கொடியே, சோமசுந்தரித் தாயே.

17. கொடியும் கழுகும் தமதென்னக் குறிக் கொண்டிருக்கும் ஆக்கையினைப்
படியில் பழுதில் பொருளாகக் கருதித் தினமும் பலர் மாட்டும்
மிடியுற்று இரந்து இங்கு உழலாது விடாம் பரமசுகக் கடலில்
படியும் படியாய் ஆறைநகர்ப் பரையே பரிந்து பணித்துஅருளே.

பொருள்: கொடியும் - காக்கை, படியில் - ஒப்பில்லாத, பழுதில் - குற்றம், குறைபாடு, கோளாறு இல்லாத, மிடியுற்று - வருமையுற்று, உழலாது - அலையாது, திரியாது, பரையே - சிவனின் திருவருளே.

காக்கையும் கழுகும் தமக்கு இரையென நினைத்து காத்துக் கொண்டிருக்கும் இந்த உடலை, ஒப்பில்லாத, குறைபாடு இல்லாத உண்மையான ஒன்றாக எண்ணி, தினமும் பலரிடமும் பிச்சை கேட்டு அலையாமல் இறைவன் திருவடி என்னும் துன்ப கலப்பில்லாத ஆனந்தக் கடலில் திளைத்திருக்கும்படி கருணையோடு கட்டளையிட்டு மணமிரங்கி அருள் செய்வாயே ஆத்தூரில் சிவனின் திருவருளாய் இருக்கும் சோமசுந்தரித் தாயே.

18. பணித்த படிக்கு உன் அருள் வழியே படர்ந்து பாச வலை அறுத்து
திணித்த மனசின் வலியறுக்கும் திறமும் காமம் முதலான
குணத்தில் வரு சங்கடம் அகற்றும் கோது இல் அருளும் பெறுவேனோ
அணித்தாய் ஆறைநகர் பொலியும் அம்மே சோமசுந்தரியே.

பொருள்: திணித்த - கடினமான, வலியறுக்கும் - வலிமையை தகர்க்கும், கோதுஇல் - கலப்பு இல்லாத, தடைஇல்லாத, அணித்தாய் - அருகில் இருப்பவளாய்.

உன் திட்டப்படியே (விதிப்படியே) உன் அருள் வழியைச் சேர்ந்து, பாச வலை அறுத்து, என் கல்மனதின் (அழுக்குகளை) துன்பங்களை நீக்கும் தன்மையும் தந்து, காமம் முதலான குணங்களினால் ஏற்படும் சங்கடங்களைப் போக்கும் உன் தூய அருளைப் பெறுவேனோ? ஆத்தூரில் எனக்கருகில் இருந்து அருள் செய்யும் சோமசுந்தரித் தாயே.

19. தரித்தும் அறியேன் திருநீறும் தண்ணார் பாதத்து அருச்சனைக்கு
பறித்தும் அறியேன் கூவிளமும் பசுஞ் சாந்தாதி சிர முயிரைப்
பிரித்துச் செலுதற்கு எமன் வரின் பின் என் செய்வேன் திரிபுரத்தைச்
சிரித்துத் தகித்த சோமேசர் செல்வ மனையே செப்பாயே.

பொருள்: தண்ணார் - குளிர்ச்சி மிகுந்த, கூவிளம் - வில்வம், பசு - ஆன்மா, சாந்து - சார்ந்து, சிரம் - தலை, கபாலம். ஆன்மா வேறு, உயிர் வேறு. ஆன்மாவையும் உடம்பையும் இணைப்பது உயிர் என்று சைவ சித்தாந்தம் சொல்கிறது. உயிர் கபாலத்தைப் பிளந்து கொண்டு பிரியும். (பசுவின் சாணத்தில் தயாரிக்கப்பட்ட திருநீறு முதலியவற்றை அணிந்துள்ள தலையின் வழியாக என்றும் சொல்லலாம்), தகித்த - எரித்த, மனை - மனைவி.

பக்தியுடன் திருநீறும் பூசி அறியேன், உன் குளிர்ந்த பாதங்களுக்கு அர்ச்சனை செய்ய வில்வ மலர்களை பறித்தும் அறியேன், ஆன்மா குடிகொண்டிருக்கும் உயிரை எடுத்துச் செல்வதற்கு எமன் வரும் போது நான் என்ன செய்வது? முப்புரங்களையும் தன் சிரிப்பால் அழித்த சோமநாதரின் செல்வமாகிய துணையான சோமசுந்தரித் தாயே சொல்வாயே.

20. செப்புவேனோ திருநாமம் செங் குங்குமச் சாந்து இடுவேனோ
அப்பும் அரவும் சடை முடித்த அரனார் மனையே ஆறைநகர்
ஒப்பில் மணியே ஒளிவிளக்கே ஓங்காரத்தின் உட்பொருளே
தப்பு இல் நெறியே யான் ஒழுகிச் சார்வேன் கொல்லோ உன் பதமே.

பொருள்: அப்பு - நீர், கங்கை, அரவு - பாம்பு, தப்பு இல் நெறி - சைவநெறி.

உன் திருநாமம் சொல்லி வணங்கியதில்லை, உன் அருட்பிரசாதமான சிவந்த குங்குமத்தை அணிந்ததில்லை, கங்கையையும், பாம்பையும் சடையில் அணிந்த சிவனின் துணைவியே, ஆத்தூரில் உள்ள ஒப்பில்லா மணியே, ஒளி விளக்கே, ஓம் என்ற மந்திரத்தின் உட்பொருளே, தப்பு இல்லாத சைவ நெறியில் வாழ்ந்து உன் பாதச் சரணங்களை அடைவேனே.

21. பதமலர் தினமும் போற்றிப் பகரரும் பேற்றைப் பெற்ற
முதியவர் உறவைப் பேணும் மூதறிவு உடையேன் அல்லேன்
விதுமுகம் உடையார் வாழ்க்கை மேவி இன்புறுவேன் என்று உன்
புதுமலர்த் தாளை வந்து பொருத்துவன் ஆறைத் தாயே.

பொருள்: பகரரும் – சொல்வதற்கு அரிய, முதியவர் – முன்னோர், மூதறிவு – பேரறிவு, விதுமுகம் – பல விதமான அபிநயங்களைக் காட்டும் முகம், சந்திரன் போன்ற முகம், விதுமுகம் உடையார் – பெண்கள் 'பொருத்துவன்' என்பதற்குப் பதிலாக 'பொருந்துவன்' என்று வாசிக்கவும்.

மலர் போன்ற பாதங்களை தினமும் வணங்கி, சொல்வதற்கு அரிதான இன்பத்தைப் பெற்ற தொண்டர்கள் போதனைகளைப் பின்பற்றும் நல்ல அறிவும் உடையவன் அல்லேன். சந்திரன் போன்ற முகத்தில் பல பாவங்களைக் காட்டும் பெண்களுடன் வாழ்ந்து இன்புறுவேன். இதிலிருந்து விடுபட்டு என்று உன் தாளில் சரணடைந்து வாழ்வேன் ஆத்தூரின் சோமசுந்தரித் தாயே.

22. ஏதமுற்று உழல்வீர் நீவிர் இன்னொரு தெய்வம் பேணீர்
போதலர் பொய்கை சூழும் புராதனப் பதியாம் ஆறை
நாதனை மணந்த சோமசுந்தரி நளினப் பாதப்
போதினை வழுத்து வீரேல் புகுந்திடீர் கருவுள் அம்மா.

பொருள்: ஏதமுற்று - துன்பமுற்று, உழல்வீர் - அலைவீர், திரிவீர், பேணீர் - நினைக்காதீர்கள், போதலர் - அரும்புகள் மலரும், புராதனப் பதி - பழமையான தலம், பாதப்போது - பாத மொட்டு.

துன்பமுற்று அலைவீர்கள் நீங்கள். அதிலிருந்து விடுபட இன்னொரு தெய்வத்தைத் தேட வேண்டாம். மொட்டுகள் மலர்கின்ற பொய்கைகள் சூழ்ந்த பழைய நகராம் ஆத்தூரில் உறையும் சோமநாதரை மணந்த சோமசுந்தரித் தாயின் அழகிய பாத மொட்டுக்களை வணங்கினால் மீண்டும் பிறவி என்பது கிடையாது.

23. அம்மையாய் உலகில் யார்க்கும் ஆரிருள் துடைத்து முத்தி
இம்மையே அளிக்க வல்ல இறைவி நீ என்று தேர்ந்தேன்
மும்மையும் அறிய வல்ல முத்தர்கள் வழுத்தும் ஆறை
அம்மையே உன் தாள் ஏத்தாது அவப் பொழுது ஆக்கினேனே..

பொருள்: ஆரிருள் - ஆணவ இருள், துடைத்து – போக்கி, நீக்கி, முத்தி இம்மையே - சீவன்முத்தி, மும்மையும் - மூன்று காலங்களையும், அவப்பொழுது - தீமை, கேடுவிளைவிக்கும் பொழுது.

உலகில் எல்லோருக்கும் அன்னயாய் இருந்து ஆணவம் என்னும் கரிய இருளை போக்கி, இப்பிறவியிலேயே முக்தி அளிக்க வல்ல இறைவி நீயே என்பதை உணர்ந்தேன். முக்காலங்களையும் உணரும் வல்லமைப் பெற்ற முக்தர்கள் வணங்கும் ஆத்தூரில் வாழும் அன்னையே உன் பாதங்களை வணங்காமல் வீணாய் பொழுதைக் கழித்தேனே.

24. **ஆக்கினேன் பொழுதை வீணாய் அல்லலைப் படைத்து நாளைப்**
போக்கினேன் சோமவல்லி பூரண அருளை இன்றே
நோக்கினேன் நோக்க நோக்க நுவலரும் பேரானந்தம்
தேக்கினேன் உளத்தின் கண்ணே தெளிந்தனன் தேவி சீரே.

<u>பொருள்:</u> நுவலரும் - சொல்வதற்கு அரிய, சீர் - பெருமை, புகழ், சிறப்பு.

பொழுதை வீணாய் கழித்து, துன்பங்களை உண்டாக்கி என் வாழ் நாளை போக்கினேன். சோமசுந்தரித் தாயின் பூரண அருளை இன்று தான் தெரிந்து கொண்டேன். அதை அறிந்து கொள்ள, கொள்ள சொல்வதற்கு அரிய பேரானந்தத்தை அடைந்தேன். தேவியின் பெருமையை என் மனத்தில் கண்டு உணர்ந்து கொண்டேன்.

25. **சீரார் இறைவி ஐந்து எழுத்தும் தேவி அருளும் திருநீறும்**
காரார் கூந்தல் சோமவல்லி கடைக்கண் ஒழுக்கும் திருவருளும்
நேரே அடையப் பெற்றவர்கள் நில மேல் பிறவி இனி ஒன்று
சேரார் இமையோர் வாழ்த்தெடுப்ப சிவலோகத்தைச் சேர்வாரே.

<u>பொருள்:</u> சீரார் – பெருமைவாய்ந்த, சிறப்பு வாய்ந்த, ஐந்து எழுத்தும் – நமசிவாய, காரார் – கருமைநிறம் கொண்ட, ஒழுக்கும் – சிந்தும்.

இறைவி போற்றுகின்ற பெருமை வாய்ந்த ஐந்து எழுத்தும் (நமசிவாய என்னும் ஐந்து எழுத்து - பராசத்தி, சிற்சத்தி, இச்சா சத்தி, கிரியா சத்தி, ஞானசத்தி என ஐந்தும்), தேவியின் அருளும், திருநீறும், மழை மேகம் போன்ற கூந்தலை உடைய சோமவல்லித் தாயின் கடைக்கண் பார்வையில் சிந்தும் திருவருளும் உண்மையாக அடையப் பெற்றவர்கள்,, இந்த உலகத்தில் இன்னும் ஒரு பிறவி அடைய மாட்டார்கள். வானத்தவர்கள் வாழ்த்த சிவலோகத்தை சேர்ந்து வாழ்வார்கள்.

26. **வார்சேர் தனத்தி சோமவல்லி மலர் பொற்பாதம் பொருளாகப்**
பார் மேல் உன்னும் பாக்கியத்தைப் பத்தி வலியால் பெற்றவர்கள்
கார்மேல் உலவும் பாக்கியமும் கமலப் போதும் அரவணையும்
பேர் போகிய மற்று எப்பதமும் பெரிதாய் சிறந்தும் கருதாரே.

<u>பொருள்:</u> வார் சேர் தனத்தி - கச்சுஅணிந்து இறுகக் கட்டிய முலைகளை உடையவள், பொருளாக - குறியாக, உன்னும் - நினைக்கும், பத்தி வலியால் - இறைவி மீது வைக்கும் அன்பின் வலிமையால், கார்மேல் - தேவர் உலகில், கமலப் போதும்- தாமரை மலரில் வீற்றிருப்பதும் (பிரமன்), அரவு அணையும் - பாம்புப் படுக்கையும் (திருமால்), தேவர்கள், பிரமன், திருமாலாய் இருக்கும் பாக்கியம் பேர் போகிய மற்று எப்பதமும் - சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படும் வேறு எந்த திருவடியும்.

கச்சு அணிந்து இறுகக் கட்டிய முலைகளை உடைய சோமசுந்தரித் தாயின் பொற்பாதங்களை மெய்ப் பொருளாக இந்த உலகில் அறிந்து கொள்ளும் பேற்றை அன்பின் வழியால் பெற்றவர்கள், தேவர் உலகில் வாழும் பேறும், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனையும், பாம்பு படுக்கையில் இருக்கும் திருமாலையும், இது தவிர இன்னும் சிறப்பு வாய்ந்ததாக சொல்லப்படும் வேறு எந்த திருவடிகளையும் மிகச் சிறந்ததாகக் கருத மாட்டார்கள்.

27. **கருத்துக்கு அடங்காக் காட்சியும் காண்பானும் தானாம் அந்நிலையைத்**
திருத்தமுறப் பெற்று ஆனந்தம் திளைக்கும்படி நன்கு அருளாயே
பருத்த தனத்தில் ஊறு அமுதம் பருக மகற்குப் பரிவாலே
அருத்தும் தாயாய் எமக்குஅருளும் அணங்கே சோமசுந்தரியே.

<u>பொருள்:</u> **கருத்துக்கு அடங்காக் காட்சியும் - சிவ தரிசனம், காண்பானும் - ஆன்மா, தானாம் - சிவமாகும், திருத்தமுற - மாறுபாடு இல்லாமல் (பழைய நிலைக்கு மீண்டும் செல்லாமல்).**

பருத்த மார்பகங்களில் ஊறுகின்ற அமுதத்தைப் பரிவோடு தன் பிள்ளைகளுக்கு ஊட்டுகின்றத் தாயாய் எமக்கு அருளும் அணங்கே சோமசுந்தரித் தாயே, கற்பனைக்கு எட்டாத மெய்ப் பொருளை காணும் காட்சியும், அதைக் காண்பவனும் நானாகும் அந்த நிலையை குறைகள் ஏதுமின்றி பெற்று ஆனந்தத்தில் திளைக்கும்படி நன்கு அருளாயே.

28. **சோமன் குரவன் பன்னியின்றோள் துய்ப்பான் கருதிக் காமுறலால்**
ஏமம் உறவும் குரு சாபம் எய்தி வருந்தி இறைஞ்சுதலும்
சேமம் அருள்செய் சோமேசர் திருநாண் பூட்டும் பெண்ணரசி
நாமம் ஒருக்கால் நவில்லீரேல் நமனார் முனிவு நண்ணீரே.

<u>பொருள்:</u> **சோமன் - சந்திரன், குரவன் - குரு, சந்திரனின் குரு இந்திரன்., பன்னி - பத்தினி, இன்தோள் - இனிய தோள்களை, துய்ப்பான் - புலன்களால் அனுபவிக்க, காமுறலால் - விரும்பியதால், ஏமம் - இன்பம், சேமம் - நலம், நமனார் - எமன், முனிவு - கோபம், வெறுப்பு, நண்ணீரே – அடைய மாட்டீர்கள்.**

சந்திரன் குருவின் பத்தினியைத் தழுவ எண்ணி காமத்தால் அணுக, குரு சாபம் பெற்று, அந்த சாபத்திலிருந்து விடுபட, வருத்தத்துடன் வணங்கி வேண்ட, சந்திரனுக்கு அருள் செய்த சோமநாத சுவாமி திருமணம் செய்த பெண்ணரசி சோமசுந்தரித் தாயின் பெயரை ஒரு தரம் உச்சரித்தாலே எமன் கோபத்துக்கு ஆளாக மாட்டீர்கள்.

29. **நண்ணேன் சாது சங்கமொரு நாளும் நவிலேன் நல்லுரைகள்**
பண்ணேன் சிவ புண்ணிய தவங்கள் பார்ப்பேன் தினமும் பசு நூலே
எண்ணேன் இறைவி மனு நாவில் இசையேன் நால்வர் திருப்பாடல்
கண்ணே ஆறைக் கன்னிகையே கடையேன் உய்யுமாறு அருளாயே.

<u>பொருள்:</u> **சாது சங்கம் – சிவனடியார்கள் சேர்க்கை, நவிலேன் - சொல்லமாட்டேன்,**
சிவ புண்ணிய தவங்கள் – எந்த பிரதிபலனையும் எதிர்பாராது சிவன் மீது அன்பு கொண்டு செய்யும் சரியை கிரியை யோகம், பசு நூல் - இறை நூல் அல்லாதவை, மனு - அருள், கருணை.

ஒரு நாள் கூட சிவனடியார் கூட்டத்தில் இருக்க நினைத்ததில்லை. சிவனை வாழ்த்தி பேசியதும் இல்லை. சிவனை நோக்கி எந்த தவமும் செய்ததில்லை. தினமும் உலோகாயதமான நூல்களை மட்டுமே படிப்பேன். இறைவியின் அருள் கடாட்சத்தை நினைத்துப் பார்க்கவில்லை. நால்வர் பாடல்களை நாவால் இசைத்ததும் இல்லை. என் கண்களைப் போன்ற ஆத்தூரின் கன்னிகையே இந்த கீழானவன் உய்யுமாறு அருள் செய்வாயே.

30. **அருளே உருவாய் சோமேசர் அங்கத்து ஒரு பால் கலந்து உறையும்**
திருவே அடியார் மிடிதீர்க்கும் செல்வ நிதியே ஞானமருள்
குருவாய் அமுதம் சிரபுரத்துக் குழவிக் கருளிச் சமண் காடாம்
இருளை ஒழித்த மணி விளக்கே என் நோய் அகற்றி அருளாயே.

பொருள்: மிடி - துன்பம், சிரபுரத்துக் குழவி - திருஞானசம்பந்தர்.

அருள் வடிவமாய் சோமநாதரின் உடலின் ஒரு பாகமாய் இருந்து வாழும் செல்வமே, உன்னை வணங்கும் அடியார்கள் துன்பத்தை போக்கும் செல்வ நிதியே, ஞான சம்பந்தருக்கு ஞானம் அளிக்கின்ற குருவாய் மாறி பாலமுதம் அளித்து இருண்ட கொள்கையை உடைய சமணரை அழித்த மணி விளக்கே, என்னுடைய நோயையும் நீக்கி அருள் செய்வாயே.

31. ஆயே உனது அருளால் ஐம்புலனும் தான் அடக்கேன்
வாயார வாழ்த்தி வணங்குகிலேன் நின் திருத்தாள்
ஓயாது உன் கோயில் உவந்து தினம் சுற்றுகிலேன்
பேயேற்குத் தென் ஆறைப் பெண்ணே இரங்குவையே.

தாயே உனது அருள் இருந்தும் ஐம்புலன்களையும் அடக்க அறியேன், உன் திருவடிகளை வாயார வாழ்த்தி வணங்கவில்லை, உன் கோயிலை ஒருமையுடன் தினம் சுற்றிய தில்லை. பேய் போன்ற எனக்கு தெற்கிலுள்ள ஆத்தூரில் உறையும் சோமசுந்தரித் தாயே அருள் செய்வாயே.

32. இரங்காத கல் மனமும் ஏத்துகிலா வன்தலையும்
அரன் காதை என்றால் அடைத்துறங்கும் கண் செவியும்
கரம் கால் கடம்பணிகள் கைவிடுத்துப் போம்படியும்
சிரம் காண நான்குடையான் செய்த தெவன் சுந்தரியே.

பொருள்: கடம் பணிகள் – இறை பணிகள்.

கொஞ்சம் கூட இரக்கம் இல்லாத கல்மனமும், பணிந்து வணங்காத தலையும், சிவன் அருள் கதைகள் என்றால் அடைத்து உறங்கும் கண்களும், காதுகளும், இறைப் பணிகள் செய்யாமல் செயலற்றுப் போன கைகளும், கால்களும், காண்பதற்கு நாலு தலைகளை உடைய பிரம்மன் விதித்து விட்டானே, சோமசுந்தரித் தாயே.

33. ஏ போல் விழியும் இழைபோலும் சிற்றிடையும்
வேய் போலும் தோளும் விது போலு மானனமும்
சேய் போலும் சிற்றடியும் செவ்வாயும் சோமவல்லித்
தாய் போலும் அன்பும் என்றும் தானகலா என் மனமே.

பொருள்: ஏ- அம்பு, இழை – மெல்லிய நூல், வேய் – மூங்கில், விது போலும் – சந்திரன் போலும், ஆனனமும் – முகமும், சேய் – குழந்தை, நீளமான.

கூரம்பு போன்ற விழிகளும், மெல்லிய நூல் போல சின்ன இடையும், மூங்கில் போல வழுமையானத் தோளும் அழகியச் சந்திரன் போல் முகமும், சிறு குழந்தையைப் போல் சிறிய திருவடிகளும், சிவந்த வாயும், சோமசுந்தரித் தாயே உன் தாய் அன்பும் என்றும் என் மனதை விட்டு அகலாமல் இருக்கும்.

34. மனமாற உன் கோயில் வாசலிலே காத்திருந்து
தினம் ஆறு காலமுமே சேவிப்பார் தங்களுடன்
சினமாறக் கும்பிட்டு என் தீவினைகள் தீர்க்கேனோ
அனமாடும் சோமாரண்யம் வாழ் ஆரமுதே.

பொருள்: அனமாடும் - அன்னம் ஆடும், சோமாரண்யம் - சோமசேர் வாழும் காடு.

அன்னங்கள் ஆடுகின்ற சந்திரன் உலவுகின்ற காட்டில் (சோமவனநாதர்) வாழும் அரிய அமுதம் போன்றவளே, உன் கோவில் வாசலிலே காத்திருந்து தினம் ஆறு காலங்களும் மனம் ஒன்றி வழிபடும் அடியவர்களுடன் என்னுடைய கோபம் தணியுமாறு கும்பிட்டு என் தீவினைகளைத் தீர்க்க மாட்டேனோ.

35. அமுதாகத் தித்திக்கும் ஆறைநகர் ஆண்டவளே
உமையே சோமேசர் உடன் உறையும் உன் கொலுவும்
சிமையாரும் கோபுரமும் திருமதிலும் சிந்தையிலே
இமையேனும் எண்ணாதார் என் கதிக்கு ஆளாவாரே.

<u>பொருள்:</u> சிமையாரும் - மலை உச்சி போல் திகழும், இமையேனும் - இமைக்கும் அளவிலாவது.

அமுதாகத் தித்திக்கும் ஆத்தூரை அரசாட்சி செய்பவளே, உமை அம்மையே, சோமநாதருடன் வாழும் நீ கொழு வீற்றிருக்கும் அழகும், மலை உச்சி போல் உயர்ந்த கோபுரமும், திருமதிலும் இமைக்கும் நேரம் கூட சிந்தையிலே நினைத்து பார்க்காதவர்கள் என்ன கதிக்கு ஆளாவார்களோ.

36. ஆமாறு அடுமைத் திறம்பட நின்று ஆணவமும்
சாமாறு செல்வித்துத் தண்ணடிக்கீழ் சாராமல்
ஏமாறி வீணுக்கே எப்பொழுதும் தானுழைத்தேன்
சோமாரணியத் துடியிடை என் செய்வேனே.

<u>பொருள்:</u> ஆமாறு - ஆகும் முறையில், அடுமை - அழிக்கும், தோல்வியுறும், திறம் - செயல்படும் சக்தி பெறுதல், சாமாறு - அழியும் வகையில், தண்ணடி - குளிர்ந்த திருவடி, துடியிடை - மிகச்சிறிய இடையை உடையவளே.

சோம வனத்தில் இருக்கும் சிறிய இடையை உடையவளே! ஆணவத்தை அழிக்கும் முறையிலான நெறியில் பிறழாமல் நின்று ஆணவத்தை அழியும்படி செய்து உன்னுடைய குளிர்ச்சியான திருவடிகளைப் பற்றிக் கொள்ளாமல், இந்த உலக வாழ்க்கையை நிலையானது என்று எண்ணி எப்போதும் வீணாக உழைத்தேன். மீண்டும் வாராத கதியை அடைய நான் என்ன செய்யப் போகிறேன்?

37. செய்வது அறியேன் தீவினைக்கே ஆளாகி
நைகின்றேன் சோமவன நாதாந்தப் பேரொளியே
ஐவர் துயரும் அனங்கன் செய் வெந்துயரும்
கைவரல் கண்டு அஞ்சிக் கைகூப்பா நிற்பனே.

<u>பொருள்:</u> நைகின்றேன் – மெலிகின்றேன், நாதாந்த - தலைஉச்சியில் இருப்பது, ஐவர் - ஐம்புலன்கள், அனங்கன் - மன்மதன், வெந்துயர் – கடும்துயர், கைவரல் - கூடிவருவது.

சோம வனத்தில் வாழும், நாதாந்தம் என்ற நிலையில் பேரொளியாகத் திகழ்பவளே! ஐம்பொறிகளால் ஏற்படும் துயரங்களும், மன்மதன் பாணத்தால் உண்டான கொடிய துயரமும் கூடி வருவது கண்டு அதனால் வரும் தீவினைகளுக்கு ஆளாகிச் செய்வது அறியாமல் வருத்தப்பட்டு அஞ்சி உன்னைக் கைகூப்பி வணங்காமல் நிற்கின்றேன்.

38. நின்றும் இருந்தும் நெடுந்தூரம் நான் கைந்து
சென்று கிடந்து உணவு தின்று துயில் கொளப் போதும்
தென்றல் கால் வந்துலவும் தென்னாறைச் சுந்தரியே
என்று விழுவேற்கு இரங்கி அருள் செய்யாயே.

பொருள்: 'நெடுந்தூரம் நான்கைந்து' என்று இருப்பதை "நெடுந்தூரம் தானலைந்து" என்று வாசிக்கவும். நின்றாலும் இருந்தாலும் நெடுந்தூரம் சென்றாலும் சாப்பிடும் பொழுதும் உறங்கும் பொழுதும் "சோமசுந்தரியே" என்று நினைக்கும்.

நின்றாலும், இருந்தாலும், நெடுந்தூரம் நான் விலகிச் சென்றாலும், சாப்பிடும் பொழுதும், உறங்கும் பொழுதும், தென்றல் காற்று வந்து உலவுகின்ற தெற்கிலுள்ள ஆத்தூர் சோமசுந்தரியே என்று நினைக்கும் என் மேல் இரக்கப்பட்டு அருள்புரிவாயே.

39. செய்ய மனத்தில் உனைச் சிக்கெனக் கொண்டு உய்வார்க்கு
மெய்யன்பு செய்யேன் விருந்தாற்றேன் சோமவனத்து
ஐயருக்கு பங்கு அமரும் ஆரணியே தாரணியில்
உய்தெற்கு என் செய்வேன் உரையாய் அடியேற்கே.

பொருள்: செய்ய - செம்மையான, வஞ்சனை இல்லாத, சோமவனத்து ஐயர் - சிவன், ஆரணியே - அணிகலன் போன்றவளே, தாரணியில் - இந்த உலகத்தில், உய்தெற்கு - உயிர் வாழ்வதற்கு, ஈடேறுவதற்கு.

சோமவனத்துத் தலைவருக்கு இடப்பாகத்தில் அமர்ந்திருக்கும் அணிகலனாக இருப்பவளே! வஞ்சனை இல்லாத செம்மையான மனத்தால் உன்னைஉறுதியாகப் பற்றிக் கொண்டு உய்யும் அடியார்களுக்கு உண்மையான அன்புடன் உணவுகொடுத்து உபசரித்ததில்லை. இந்த உலகத்தில் நான் ஈடேறுவதற்கு என் செய்வேன்? அடியனாகிய எனக்குக் கூறுவாயாக.

40. அடியார் நடுவுள் அமர்ந்திருந்து சந்ததமும்
முடிமேலே கைகூப்பி முத்து முத்தாய்க் கண்ணீர்
வடிய உனது இருதாள் மனத்து இருத்த வல்லேனோ
குடியாகச் சோமவனம் கோயிலாக் கொண்டவளே.

பொருள்: சந்ததமும் - எப்பொழுதும் உன்னையே சரண் என, முடி மேலே - தலை மேலே, குடியாக - குடி இருப்பவளாக.

சோமவனத்தில் கோயில் கொண்டு குடியிருப்பவளே! எப்பொழுதும் உன்அடியவர்கள் நடுவில் அமர்ந்திருந்து, தலை மேல் கைகுவித்து, கண்களிலிருந்து கண்ணீர் முத்து முத்தாக வழிய, உனது இரு தாள்களையும் மனத்தில் இருத்த வல்லவனோ!

41. வளமுடைய நாடிருக்கக் காட்டுள் சென்று வகையாகத் துணி இருக்க மரத்தோல் சுற்றி
நளபாக அறுசுவை நல்லுணவை நீத்து இளையாத தவசு இயற்ற வல்லார்க்கு என்றும்
இட்ட சித்தி அருள் சோமவல்லித் தாயே கிளையாதி உறவு பந்தம் கிளைத்து எந்நாளும்
கெடுவேற்கு உன் அருள் வந்து கிட்டும் கொல்லோ.

பொருள்: இளையாத - தொய்வில்லாத, இடைவிடாத கிளையாதி - பரம்பரையாக வரும், கிளைத்து – மேலும் பெருக்கி.

வளங்கள் நிறைந்த நாடு இருக்க காட்டுள் சென்று இருந்து, உடுத்த நல்ல துணி இருக்க மரத்தோல் அணிந்து, , நளபாகத்தில் சமைத்த அறுசுவை உணவைத் தவிர்த்து குற்றமில்லாத தவம் செய்ய வல்லவர்க்கு என்றும் அவர்கள் நினைத்தபடி சித்தியை அருள்கின்ற சோமவல்லித் தாயே!

பரம்பரையாக வரும் உறவுகள் மேல் பாசத்தைப் பெருக்கி தினமும் கெட்டுப் போவேனுக்கு உன் அருள் கிடைக்காமல் போகுமா?

42. கொல்லுலையில் காய்ச்சுண்ட இரும்பே மானக் கொட்புறக் கூற்றுவன் எரிவாய்க் கவிழ்த்தும் போது
நில் இவன் எம் அடியன் எனக் கரத்தை நீட்டி நிறுத்தி அருள் செய்திடுவாய் நெடுநாளாக வல்லை வலைப் பட்டூ அழுந்தும் மானாய்ச் சென்ம வாரிதி வாய்ப் பட்டு மிக வருந்துகின்றேன்
மல்லல் வளம் பொழி சோமவனத்தே வாழும் மாதேவி காத்தருளாய் சரண் புக்கேனே.

பொருள்: மான - ஒத்து, போன்று, கொட்புற - சுழன்று சுழன்று, வல்லை - காடு, சென்ம வாரிதி - பிறவிக் கடல், மல்லல் - செல்வம், செழிப்பு, மிகுதி.

கொல்லன் உலையில் இரும்பைக் காய்ச்சுவது போல எமதூதர்கள் எரிகின்ற நெருப்பில் சுழன்று சுழன்று கவிழ்த்தும் பொழுது, 'இவன் என்னுடைய அடியவன்' என்று கையை நீட்டித் தடுத்து நிறுத்தி அருள் செய்திடுவாய்.வலிமையான வலையில் அகப்பட்ட மானைப் போல நெடுங்காலமாக பிறவிக் கடலில் விழுந்து மிகவும் வருந்துகின்றேன், செல்வவளம் மிகுந்த சோமவனத்தில் வாழும் பார்வதி தேவியே! உன் பாதங்களில் சரண் புகுந்தேன்.காத்துஅருள் புரிவாயாக.

43. புகுந்தவனைப் புகல் வேறு இங்கு இல்லை எனப் புறக்கணித்தல் அழகாமோ பொருளை நீத்தம்
புகுந்துலவு சோமவனப் புனித வாழ்வே போதிட்டு உன் மலரடியைப் பூசித்து ஏத்தத் தகுந்தரமும் பக்குவமும் சற்றும் காணாத் தன்மையனேன் ஏழமையைத் தனித்து நோக்கி நகும் தரத்தில் வையாமல் அருளை நல்கி நற்கதிக்கு ஆளாகும் வண்ணம் நலன் நல்காயே.

பொருள்: புகல் - அடைக்கலம், "பொருளை' என்பதற்குப் பதிலாக "பொருனை" என வாசிக்கவும், நீத்தம் - நித்தம், போதிட்டு - அரும்பாக உள்ள (வண்டுகள் மொய்க்காத) மலர்களை இட்டு, தகுந்தரம் – பொருத்தமான தரம், ஏழமை – ஒன்றும் இல்லாத தன்மை, நற்கதி – முக்தி.

பொருநை என்று அழைக்கப்படும் தாமிரபரணி ஆறு தினமும் உலவும் சோமவனத்தில் வாழும் பரிசுத்தமான தெய்வீகமான வாழ்வைத் தரும் சோமசுந்தரியே! உன்னிடம் சரண் புகுந்தவனை இங்கு அடைக்கலம் இல்லை என்று ஏற்றுக் கொள்ளாமல் விலகி இருப்பது உனக்கு அழகோ? மலர்கள் இட்டு உன் மலர் போன்ற திருவடிகளைப் புகழ்ந்து வழிபடத் தகுதியும், முதிர்ச்சியும் சிறிதும் இல்லாத தன்மை உடைய என்னை, என்னுடைய குறைபாடுகளைக் கருத்தில் கொண்டு பிறர் எள்ளி நகையாடும்படி வையாமல் அருள் புரிந்து நல்ல கதிக்குச் செல்லும்படி நன்மையைத் தருவாயே.

44. நல்குவாய் அருள் என்றே நாடி என்றும் நள்ளிருளும் ஒண்பகலும் பாடிப் பாடிப் புல்குவான் உன்னடியைக் கிட்டும் தோறும் புன்மையனேன் கரும வினைப் பாசம் பொங்கிப் பில்குதலால் பிற்பட்டுத் திகைத்து வீழ்வேன் பேதமையை எவ்வாறு பிதற்றல் செய்வேன் மல்குபொழில் சூழ் ஆற்றூர் வாழவந்த மாசோமசுந்தரியே காத்தாள்வாயே.

பொருள்: நல்குவாய் - கொடுப்பாய், அளிப்பாய், ஒண்பகல் - பிரகாசமான (ஒளிமயமான) பகல், புல்குவான் - அணைபவன், சேருபவன், புன்மையனேன் - சிறுமைஉடையவன், இழிவானவன், பில்குதலால் - கண்ணீர் விடுவதால், பேதமை - அறிவின்மை, மல்குபொழில் - சோலைகள் நிறைந்த.

அடர்ந்த சோலைகள் சூழ்ந்த ஆத்தூரில் வாழ்கின்ற பெருமைவாய்ந்த சோமசுந்தரியே! நீ அருள் தருவாய் என்று உன்னை நாடி இரவும் பகலும் தோத்திரம் பாடிப் பாடி அணைபவன் உன்னுடைய திருவடியை அடையும் பொழுது, சிறுமை உடையவனான நான் கர்ம வினையினால் பாசம் பொங்கி உறவுகளை நினைத்துக் கண்ணீர் விடுவதால் திருவடியை அடைய முடியாமல் பின்தங்கி திகைத்து வீழ்கிறேன். என்னுடைய அறியாமையை நான் என்னவென்று பிதற்றுவது? என்னைக் காத்து அருள்வாயாக.

45. வாயுண்டு பாடுவதற்கு நினைக்க நெஞ்சும் மலரெடுத்துச் சாத்துவதற்குக் கரங்கள் உண்டு
சேயுண்டு குருவாக அருளைக் காட்டத் தேனுண்டு பாலுண்டு தினமும் ஆட்டக்
காயுண்டு பழமுண்டு நிவேதித்து ஏத்த கருணை வடிவாகும் அருள் சோமவல்லித்
தாயுண்டு காப்பதற்கு நாயேற்குத் தரணியிலே பயமொன்றும் இல்லைத் தானே.

<u>பொருள்:</u> சேய்– ஆதாரம்.

உன்னை புகழ்ந்து பாடுவதற்கு வாயுண்டு, எப்போதும் நினைத்திருக்க நெஞ்சுண்டு, உன்னை பூக்களால் வணங்குவதற்கு கைகள் உண்டு, நீ குருவாக இருந்து அருள் செய்ய குழந்தையாகிய நான் உண்டு, தினமும் உன் அபிஷேகத்திற்கு தேனுண்டு, பாலுண்டு, உன் நைவேத்தியத்துக்கு காயுண்டு, பழமுண்டு, கருணை வடிவான சோமசுந்தரித் தாயுண்டு காப்பதற்கு, அதனால் நாய் போல கீழான எனக்கு இந்த உலகத்தில் எந்த பயமும் இல்லைத் தானே.

46. தானாகி அகிலமெங்கும் பரந்து நின்ற தனித்த வொரு பரம்பொருளின் அருளே தானாய்
வானாகிப் புனலாகி மண்ணுமாகி வளியாகி ஒளியாகி வயங்கு மற்றைக்
கானாகி மலையாகிக் கடலுமாகிக் காண்பரிய பொருள் அனைத்தும் கலந்து நிற்கும்
தேனாகித் தித்திக்கும் அமுதமாகித் திகழ் சோமவல்லி பதம் சிந்திப்பேனே.

<u>பொருள்:</u> சிவனின் திருவருள் தான் சக்தி; அது திரோதான சக்தியாக நம்முள்ளே இருக்கிறது.

உலகங்கள் முழுவதும் பரவி நிற்கின்ற ஒப்புமை இல்லாத பரம்பொருள் சிவனின் திருவருளாக இருப்பவளே! ஆகாயம், நீர், நிலம், நெருப்பு, காற்று முதலிய ஐம்பூதங்களாகவும், மேலும் விளங்கும் காடுகளாகவும், மலையும், கடலுமாகி, ஐம்புலன்களால் அறிவதற்கு அரிதான பொருட்கள் அனைத்திலும் கலந்து நிற்கும் தேன் போலவும், தெவிட்டாத அமுதமாகவும் திகழும் சோமவல்லியின் பாதங்களை எப்போதும் மனத்தில் வைத்திருப்பேனே.

47. சிந்திப்பார் சிந்தனையுள் தித்தித்து எந்நாளும் தெள்ளமுதாய் ஒழுகு சுவைக் கரும்பின் சாறே
வந்திப்பார் மனம் கோயிலாக வீற்று வாழ்விக்கும் சோமவல்லித் தாயே நீண்ட
பந்தத்தால் ரசோதமமாம் குணமேலிட்டு பக்தி வைராக்கியங்கள் அறவே இன்றி
நொந்தவனைக் கடைக்கண்ணால் சிறிது நோக்கி நோன் தாள் சேர்த்திடல் உனது கடனே அம்மா.

<u>பொருள்:</u> வந்திப்பார் - வணங்குவார், ரசோதம் - இராட்சச குணம், நோன் தாள் - தாங்குகின்ற பாதம், ஆதாரமானபாதம், கடன் - கடமை.

உன்னை நினைத்து போற்றுபவர்களின் மனம் மகிழும்படி, எல்லா நாளும் தெளிந்த அமுதம் போல தித்திக்கின்ற சுவையான கரும்பின் சாறே, உன்னை வணங்குவார் மனமே கோயிலாகக் கொண்டு அருள் செய்யும் சோமசுந்தரித் தாயே, நீண்ட காலமாக பாசத்தால் ராட்சச குணம் அதிகமாகி, பக்தி வைராக்கியங்கள் அறவே இன்றி வருந்துபவனை, உன்னுடைய கடைக் கண்ணால் சிறிது நோக்கி, உன்னுடைய திருவடிகளில் தாங்கிக் கொள்ள வேண்டியது உன்னுடைய கடமை அம்மா.

48. அம்மனையாய் அகிலமெல்லாம் திரட்டி ஒன்றாய் அருள் விளையாட்டு அயரும்போது அடியேன் செய்த
வெம்மையுறு கொடும் பாவம் ஒன்றாய்க் கூடி மேல் கீழாய் சுழல் போது நசித்திடாதோ
சிம்மவொரு கணமேனும் சலனமின்றி சுகக்கடலில் படிந்திருக்கும் படியாய் வையாய்
மும்மையினும் அழிவின்றிக் குலவும் ஆறைமூதூரே கோயிலாகக் கொண்ட மின்னே.

பொருள்: அம்மனையாய் - அம்மானையாய், அயரும் - வாடும், வெம்மையுறு - உக்கிரமான, கடி - விரைவாக, சிம்ம - சும்மா என்பதன் மருவு, மும்மையிலும் - மூன்று காலங்களிலும், குலவும் - விளங்கும்.

முக்காலங்களிலும் அழிவின்றி விளங்கும் ஆத்தூரைக் கோவிலாகக் கொண்ட ஒளி படைத்தவளே, ஈரேழு உலகங்களை உருட்டி கழச்சிக் காய்களாக மாற்றி நீ அம்மானை ஆடும்போது, அவை ஒன்றோடொன்று மேல் கீழாய் சுழலும் போது, என்னுடைய சுடுகின்ற கொடும்பாவமும் சேர்ந்து சுற்றுவதால் அழிந்து போகாதோ? ஒரே ஒரு கணமேனும் எந்த இடை வெளியுமின்றி என்னை சுகக்கடலில் படிந்திருக்கும்படி வைப்பாயே.

49. மின்போலும் இடை படைத்து வேத உச்சிமேல் ஒளிரும் பரஞ்சுடர் தோள் மேவு மன்னே
என் போலும் பாவியர்க்கும் அருளின் அன்றோ இயற்கையிலே கருணையுள இறைவி என்பார்
பொன் போலும் மணி போலும் செந்நெல் ஈனும் பொழில் சூழும் பழனமார் ஆறைச் செல்வி
உன் போலும் அடியர் துயர் ஒழித்துக் காக்கும் உத்தமமாம் சத்திமார் ஒருவர் இன்றே.

பொருள்: படைத்து - பெற்று, வேத உச்சி - மறை முடிவில்; வேதங்களைக் கடந்து அவைகளால் அறிய முடியாத, பரஞ்சுடர் - மேலான சுடர்; பரமசிவன், மேவும் அன்னே - அணையும் அன்னையே, பொழில் சூழும் - சோலைகள் சூழ்ந்த, பழனம் ஆர் - வயல்கள் நிறைந்த, உத்தமமாம் - மேலான.

மின்னல் போல இடை அமையப் பெற்று, வேதங்கள் அனைத்துக்கும் ஆதாரமாய் (உச்சியாய்) இருக்கும் ஜோதி வடிவான சோமநாதரின் தோள்களைத் தழுவும் அன்னையே, என்னைப் போன்ற பாவிகளுக்கும் நீ அருள் செய்வதால் அன்றோ உன்னை இயற்கையிலேயே கருணை உள்ள இறைவி எனப் போற்றுகிறார்கள். பொன்னைப் போலவும், ஒளிரும் மணிகளைப் போலவும் உள்ள செந்நெல் விளையும் சோலைகள் சூழ்ந், வயல்கள் சூழ்ந்த ஆத்தூரின் அன்னையே, உன்னைப் போல அடியார்களின் துயர் நீக்கிக் காக்கும் உத்தமமான சக்திமார்கள் வேறு எவரும் இல்லை.

50. இல்லாத பொருள் உளதோ இறைவி நீயே எப்பொருட்கும் காரணி என்றிருக்கே யாதி
சொல்லாது விடவில்லை துணிபீதாகத் தொல்லை வினைப் பழஞ் சரக்கைத் தாயே கொண்டு
வில்லாதுவிடின் அதனை யார் பால் விற்பேன் விறகெடுத்து வளை சுமந்து விற்றான் தேவி
அல்லாயோ சோமவனத்து அனமே என் சொல் அணுவேனும் செவிபுகுத்தி அருள் செய்யாயே.

பொருள்: காரணி - தோன்ற, நிலைக்க, ஒடுங்கக் காரணமாய் இருப்பவள், இருக்கே யாதி - இருக்கு முதலிய வேதங்கள், துணிபு ஈதாக - கொள்கை, உறுதி இதுவாக; துணிந்த பொருளாக இருப்பதால், தொல்லை வினை - அநாதியாக, தொன்று தொட்டு வருகின்ற வினை, வில்லாது விடின் - அவற்றை ஏற்றுக் கொண்டு அல்லது வேரறுத்து பிறப்பில்லாத நிலையைத் தரா விட்டால் யார் பால் விற்பேன் - வேறுயார்அதைச்செய்ய முடியும், அனமே - அன்னமே, அணுவேனும் - சிறிதேனும்.

எல்லா பொருட்கள் தோன்றுவதற்கும் காரணமானவள் நீயே என்பதால், நீ இல்லாத பொருள் என்ற ஒன்று இவ்வுலகில் கிடையாது என இருக்கு முதலான வேதங்கள் அனைத்தும் சொல்கின்றன. என்னுடைய பல பிறவிகளில் சேர்த்த பாவ வினையெல்லாம், விறகெடுத்து, வளை சுமந்து விற்ற சோமநாதரின் மனைவியான உன்னாலேயே அழிக்க (விற்க) முடியவில்லை என்றால் வேறு

யாரால் அழிக்க (விற்க) முடியும்? சோமவனம் என்னும் ஆத்தூரில் வாழும் அன்னமே, என்னுடைய வேண்டுதலை சிறிதேனும் கேட்டு அருள் செய்வாயே.

51. ஆயும் பொழுது உனது அடியைத் தொழுபவர் அல்லல் பிறவியுள் செல்லாரே
காயும் பொறி பல கரணத் தொகுதிகள் கன்மப் பிணிகளும் நில்லாவே
பாயும் புலிகளும் பசுவும் ஒரு துறை பருகும் சிவநகர்த் தென்னாறைத்
தாயும் பிறை அணி சடிலத்து இறையவன் தன் பங்கினில் உறை பெண்ணாளே.

பொருள்: ஆயும் பொழுது - ஆராய்ந்து பார்த்தால், அல்லல் பிறவியுள் செல்லாரே – மீண்டும் துன்பம் தரும் பிறவியில் சேர மாட்டார்கள், காயும் - துன்பம் செய்யும், பொறி - ஐம்பொறிகள், கரணத் தொகுதிகள் - சித்தம் மனம் புத்தி அகங்காரம் முதலானவை, கன்மப் பிணிகள் - நல்வினை, தீவினைப் பயன்கள்; அவை துன்பத்தைத் தருபவை. நல்வினை செய்தாலும் மீண்டும் பிறப்பு வரும். ஆனால் 'நான் செய்தேன்' என்று எண்ணாது "எல்லாம் சிவன் செயல்" என்று அவன் குறிப்பு அறிந்து செயல்களில் ஈடுபட்டால் வினைப் பயன் நம்மைச் சேராது, பிறை அணி - சந்திரன் பிறையை அணிந்த, சடிலத்து - சடையை உடைய.

பாயும் புலிகளும், பசுவும் ஒரே இடத்தில் தண்ணீர் குடிக்கும் தன்மையான சிவநகரான தெற்கிலுள்ள ஆத்தூரின் தாயாக இருப்பவளும், பிறை அணிந்த சடைமுடி உடைய சோமநாதரின் இடது பாகத்தில் இருக்கின்ற பெண்ணரசியே, ஆராய்ந்து பார்த்தால், உனது திருவடிகளை வணங்குபவர்கள் மீண்டும், மீண்டும் பிறக்கும் துன்பத்தை அடைய மாட்டார்கள். ஐம்பொறிகள், சித்தம், மனம், புத்தி, அகங்காரம் என்னும் கரணத் தொகுதிகள், ஊழ்வினை என்னும் கர்மப் பிணிகளும் துன்பத்துக்கு காரணமாக இருக்காது.

52. ஆளும் கருணையில் அடியார்க்கு உறு பல அல்லல் மிடி பிணி இல்லாதே
மாளும்படி அருள் கூடும்படி புரி வல்லாள் அதி தயவு உள்ளாள்
ஏகாளும் பல கவி பாடும்படி சொலி நானும் புனைவதை அன்பாலே
தோளும் இரு மலர்த் தாளும் அணிபவள் சோமேச்சுரி எனும் எந்தாயே.

பொருள்: அல்லல் - துன்பம், மிடி - வறுமை, பிணி - நோய், மாளும் படி - அழியும் படி, கழியும் படி, புரி - செய்ய, அதி தயவு - மிகுந்த கருணை, ஏகாளும் – விலகிச் செல்ல மாட்டாள், புனைவதை - புதிதாக செய்வதை, உருவாக்குவதை.

தன்னுடைய கருணையால் ஆட்கொண்டு அடியார்க்கு வரும் பல துன்பங்களையும், வறுமையையும், நோய்களையும் அழித்து அவர்களுக்கு அருள் கிடைக்கும்படி செய்ய வல்லவளும், மிகுந்த அன்புடையவளும், அவர்களை விட்டு விலகிச் செல்லாதவளும் ஆன சோமசுந்தரித் தாய், என்னை பல பாடல்கள் பாடும்படிச் சொல்லி, நான் பாடும் பாடல்களை (பாமாலையை) அன்பாலே தன் தோளிலும், இரு பாத மலர்களிலும் அணிந்து கொள்வாள்.

53. தாயாய் வருவாள் தாய் இல் மகர்க்கு இரு தனமும் ஊட்டுவள் சண்பையர்க்கு
சேயாய் வருவாள் செங்கோல் ஓச்சுவள் தென்னவன் மனைவி பொன்மாலைக்கு
தீயாய் வருவாள் தெவ்வுயிர் உண்பான் சிறுமை தொலைப்பாள் அடியேற்குப்
பாயாய் பள்ளி பாற்கடல் கொள்வான் பரவு தென்னாறைப் பார்ப் பதியே.

பொருள்: சண்பையருக்கு - சீர்காழியில் அவதரித்த திருஞான சம்பந்தருக்கு, சேய் - குழந்தை, தெவ்வுயிர் - பகையான உயிர், சிறுமை - அவமானம், துன்பம், நோய், பாயாய் - படுக்கையாய், பார்ப் பதி -உலகத்து உயிர்களுக்கு எல்லாம் தலைவி, பரவு - வழுத்தும்.

பாற்கடலையே படுக்கையாகக் கொண்டவன் (திருமால்) போற்றுகின்ற தெற்கிலுள்ள ஆத்தூரில் வாழும் எல்லா உலகத்துக்கும் தலைவியானவள், தாய் இல்லாத பிள்ளைகளுக்குத் தாயாக வருவாள், ஞானசம்பந்தருக்கு தன் இரு தனத்தாலும் ஞானப் பால் ஊட்டுவாள், பாண்டிய மன்னன் மலயத்துவசனுக்கும், காஞ்சனமாலைக்கும் (பொன்மாலைக்கும்) குழந்தையாய் பிறந்து அரசாட்சி செய்வாள், அடியவர்களின் உயிர்களைப் பறித்துச் செல்லும் கூற்றுவனின் (எமனுக்குப் பகை உயிர்) செயலை அழிக்கும் தீயாக வருவாள்.

.

54. பாரும் விண்ணும் எண்திசைக் காக்கும் பாலகர் முதலோர் துதிசெய்ய
நீரும் நீரின் தண்மையுமாகி நீங்காது அரனோடு ஒன்றாகிக்
கூரும் அருளால் உயிர்ப் பிணி பந்தம் கூறு செய்து ஏழை உன்னடியைச்
சாரும்படி அருள் சோமவனத்து உறை சந்திர சுந்தரித் தாயமையே.

<u>பொருள்:</u> பாரும் - இவ்வுலகத்தில் உள்ளோரும், விண்ணும் - விண்ணுலகத் தேவர்களும், தண்மை - குளிர்ச்சி, கூரும் - மிகுதியான, உயிர்ப் பிணி - உயிரின் நோயாகிய, பந்தம் - மும்மலங்கள் (ஆணவம் கன்மம் மாயை), கூறு செய்து - பரிபாகம் செய்து; மலங்களை வலுவிழக்கச் செய்து.

நிலவு வீசும் காட்டில் இருக்கின்ற சோமசுந்தரித் தாயே, இந்த உலகத்தாராலும், விண்ணவர்களாலும், எட்டு திசையும் காத்து நிற்கும் திக்பாலகர்களாலும் போற்றப்படுபவளே, தண்ணீராகவும், தண்ணீரின் குளுமையாகவும் இருந்து சோமநாதரை நீங்காமல் ஒரு பாகமாகியவளே, உன் மிகுதியான அருளால் நோயாகிய பிறப்பு என்னும் கட்டறுத்து, கீழான நான் உன் அடியைச் சேரும்படி அருள்வாயே.

55. அம்மைப் பயனோடு இம்மைப் பயனும் அன்பொடு பணிவார்க்கு அக்கணமே
சும்மை சும்மையாத் தரும் என்ன சொற்றிடும் நூல் பல கற்றே யான்
வெம்மைப் பாவ சஞ்சித நீங்கி வீடுறுமாறு விரைகின்றேன்
கொம்மைச் செம்முலை சோமீச்சுர இறை சூழைத்திட மனமது மகிழ்வாளே.

<u>பொருள்:</u> அம்மைப் பயன் - முக்தி, இம்மைப் பயன் - இந்த உலகத்தில் வாழ்வதற்கு வேண்டிய நலன்கள், சும்மை சும்மையா – மிகப்பெரிதாக, வெம்மை - கொடிய, சஞ்சிதம் - இன்னும் பக்குவத்திற்கு வராமல் இருக்கும் வினைப் பயன், வீடு - முக்தி, கொம்மை - இளமை, அழகு, 'சூழைத்திட' என்பதற்குப் பதிலாக "குழைத்திட" என்று வாசிக்கவும், குழைத்திட - ஒன்று சேர்ந்திட.

இளமையான (அழகிய) சிவந்த முலை அழுந்த சோமநாத சுவாமியைத் தழுவி மனம் மகிழும் அன்னையே, உன்னை அன்போடு வணங்குபவருக்கு இந்தப் பிறவி பயனாகிய நலங்களையும், அம்மைப் பயனாகிய முக்தியையும் உடனடியாக மிகுதியாகத் தருபவள் என்று சொல்லுகின்ற பல நூல்களை படித்ததால், என்னுடைய கொடிய பாவ சஞ்சிதம் (இன்னும் முற்றுப் பெறாத இப்பிறவியிலுள்ள பாவக் கணக்கு) நீங்கிப் போக்குமாறு வேண்டுகிறேன்.

56. வாளே அனைய கண்ணியர் ஆசை வலைப் பட்டு உழல்வேற்கு
மாளா அன்பு நாளா ரம்பம் வந்திட அருள் செய்வாள்
வேளே செய் துயர் மூளாவகை புரிவித்து அக மெய்ஞ் ஞான
வாளானவருக்கு ஆளாகிய துணை ஆளாய் ஆறை வருவாளே.

<u>பொருள்:</u> வாளே அனைய - கத்தியைப் போன்று கூர்மையான, கண்ணியர் - கண்களை உடைய பெண்கள், மாளா - அழியாத, குறையாத, நாளாரம்பம் - ஒவ்வொரு நாளும் காலையில் தினமும் காலை எழும் பொழுது சிவனை நினைப்பவருக்குப் பிறவித் துன்பம் வந்து சேராது என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார், இறைவி மீது குறையாத அன்புடன் தினமும் இருந்தால் அருள் செய்வாள் என்று கூறுகிறார், வேளே - மன்மதவேள், செய்துயர் – காமத்தால் வரும் துன்பங்கள்,

மூளா - பெருகா, மீண்டும் வாரா, அக மெய்ஞ் ஞான ஆளானவர்களுக்கு - உள்ளத்தில் மெய்ஞ் ஞானத்தை உணர்ந்து இறைவிக்கு ஆட்பட்டவர்களுக்கு, ஆளாகிய - ஆட்கொண்ட.

வாளைப் போன்ற கூர்மையான கண்களை உடையவர்களின் ஆசை வலையில் அகப்பட்டு தவிப்பவர்களுக்கு, நிலையான பக்தி வணங்கும் நாளிலியே வந்து சேரும்படி அருள் செய்வாள். மன்மதன் கொடுக்கின்ற துன்பங்களுக்கு ஆளாகாமலும் காத்து, உள்ளத்திலே மெய்ஞ்ஞானத்தைத் தேக்கி வைத்தவரை ஆட்கொள்ளும் துணையாக ஆத்தூர் சோமசுந்தரித் தாய் வருவாளே.

57. வருவாள் தண்டைச் சிலம்புகள் ஆர்ப்ப வந்து என் மடி இருந்து
தருவாள் அன்னம் பாலுடன் உண்ணத் தற்போதம் கெடுப்பாள்
கருவா புரியுள் உருவா காது கண் பார்த்திடுவாளே
உருவா அருவா அருவுருவாக உற்றருள் ஆறை உமை தானே.

<u>பொருள்:</u> தற்போதம் - ஆணவம், கருவா புரியுள் காது கண் பார்த்திடுவாள் - உயிர்களுக்கு உடம்பைத் தருவது சக்தி, உருவா அருவா அருவுருவாக சிவசக்தி – அருவம், மனோன்மணி - அருவுருவம், மகேஸ்வரி –உருவம், சிவனுக்கு சொரூப நிலை மட்டுமே உண்டு; அரு, உரு, அருவுருவம் கிடையாது. அவனுடைய சக்திக்குத் தான் அவை உண்டு.

உருவாய் (மகேஸ்வரி), அருவாய் (சிவசக்தி), அருஉருவாய் (மணோன்மணி) இருந்து அருள்கின்ற ஆத்தூர் உமையம்மை கருவில் எனக்கு உருவம் கொடுத்து காதும், கண்ணும் கொடுத்து அவற்றின் வழியாகப் பார்த்து எனக்கு அறிவிக்கிறாள். அவளே காலில் அணிந்துள்ள தண்டை சிலம்புகள் ஆரவாரிக்க வந்து, என் மடியில் இருந்து பாற்சோறு தருவாள். அதை உண்ண எனது ஆணவ மலம் கெடும்.

58. தானம் தவமே ஆனவை ஒன்றும் தான் புரிந்து அறியேன்
மோனம் தியானம் கனவினும் என்றும் முயன்றும் தான் பழகேன்
ஏனம் எகினம் தேடியும் எய்தா இறைவன் சோமேசன்
வானம் புகழ அம்மியில் வைத்த மலரடி வாழ்த்துவனே.

<u>பொருள்:</u> மோனம் - மௌனமாய் இருப்பது, ஏனம் - பன்றி (திருமால்), எகினம்- அன்னம் (பிரமன்), எய்தா– காணமுடியாத.

தானம், தவம் எதுவும் நான் செய்தது கிடையாது. மோனம் (எண்ணங்கள் இல்லாமல் மௌனமாக இருக்கும் நிலையும்), தியானம் இவற்றைக் கனவிலும் ஒருபோதும் முயன்று பார்த்ததில்லை. திருமால் பன்றியாக மாறி ஏழுலகத்தையும் குடைந்தும், பிரமன் அன்னம் வடிவில் பறந்தும் தேடியும் காண முடியாத இறைவனாகிய சோமநாதர், பக்தர்கள் காண ஆத்தூரில் உறைகின்ற வகையில், வானவர்கள் புகழ அம்மி மிதித்து மணம் செய்த சோமசுந்தரித் தாயின் மலர் அடிகளை வணங்குகின்றேன்.

59. வாழ்த்தும் படியாய் வானவர் தானவர் வந்து தினந்தோறும்
சூழ்த்து மாமலர் மது உண வந்து சூழ்ந்திடு வண்டினமே
தாழ்த்தாகினும் வந்து என் குறைபாடு தவிர்த்து அருள் செய்யாளேல்
பாழ்த்தாகும் என் வாழ்வென ஓதாய் பரையாம் சோமசுந்தரிக்கே.

<u>பொருள்:</u> சூழ்த்து - சூழ்ந்து, தாழ்த்தாகினும் - மேலும் காலம் தாழ்த்தாமல், பாழ்த்தாகும் - பாழடைந்து விடும்; என் வாழ்வின் நோக்கம் முக்தி அடைவது; அது கெட்டுப் போகும் பரை – யாவற்றிற்கும் மேலான இறைவி.

தினந்தோறும் விண்ணவர்களும், மாயா அசுரர்களும் (தானவர்) சோமசுந்தரித் தாயை வணங்குவதற்காக சூட்டுகின்ற மலர் மாலைகளில் உள்ளத் தேனை அருந்த சூழ்ந்த வண்டினமே, மேலும் காலம் தாழ்த்தாமல் வந்து என் குறைகளைத் தீர்த்து அருள் செய்ய வில்லை எனில், என் வாழ்க்கையே பாழாகும் என்று மேலான இறைவியாம் சோமசுந்தரித் தாயிடம் கூறுவாயாக.

60. கேடே உறுவேன் கெடுவேன் எனினும் கேடில்லாய் நீ பழி கொள்வாய்
பாடே படுவேன் பட்டால் அடையும் பயன் ஒன்று உண்டோ உனக்கு அம்மா
வாடா நின்று நீடே காலம் வழிபாடாற்றி வருவேனால்
தேடார் காணக் கூடா ஆறைத்தேவி அருளாய் சிறியேற்கே.

<u>பொருள்:</u> கேடே உறுவேன் - அழிந்து போவேன், கேடில்லாய் - அழிவில்லாதவளே, பழி கொள்வாய் - நான் அழிந்தாலும், கெட்டுப் போனாலும் அதன்பழி உனக்குத் தான், நான் துன்பம் அடைந்தால் அதனால் உனக்கு ஏதும் பயன் உண்டோ?, வாடா - நீங்காமல், நீடே - நீண்ட, மிகுந்த தேடார் - தேடாதவர்கள்.

உன்னைத் தேடாதவர்களால் காண முடியாத ஆத்தூரின் அரசியே, நான் துன்பப் பட்டாலும் அதனால் அழிந்தே போனாலும், அதன் பழி உனக்குத் தான் வந்து சேரும். இத்துன்பங்களால் நான் மிகவும் வருந்துவேன். அதனாலும் உனக்கு எந்த ஒரு பயனும் உண்டோ அம்மா. உன்னை நீங்காமல் நின்று நீண்ட நெடுங்காலமாக வணங்கி வருகின்ற இந்த சிறியவனுக்கு அருள் செய்வாயே.

61. சிறு மணி பொருக்கி வடத்தினில் கோத்துத் திகழ் மணி மாலையாச் செய்து
பொறு விலை உலகில் பூமி ஆள் மன்னர் போன்றிட்டு தனிகர் பால் வணிகர்
பெறுவது கடுப்ப சிறு சொலா மணிகள் பெட்புறத் தமிழினால் கோத்த
மறுவில் இம்மணியை ஆறைவாழ் வழுதிமன் மகள் கொண்டு நீ அருளே.

<u>பொருள்:</u> தனிகர் - செல்வர், கடுப்ப - ஒப்ப, போன்ற, பெட்புற - விரும்பத்தக்க, மறுஇல் - குற்றம், களங்கம், வழுதி மன் மகள் - பாண்டியன் மகள் (மீனாட்சி).

சிறு மணிகளைத் தேர்தெடுத்து நூலிலே கோத்து ஒளி வீசும் மணி மாலையாகச் செய்து, இந்த உலகிலே உலகாளும் மன்னர்கள் போல் திகழும் செல்வர்களிடம் விற்று, அதற்கேற்ற பொருளைப் பெறுவது போல, தமிழினில் சின்ன மணி போன்ற சொற்களைத் தேர்ந்தெடுத்து கோத்த, மாசு, மருவில்லாத இந்த பாமாலையை ஆத்தூரில் வாழுகின்ற பாண்டியனின் புதல்வியான நீ ஏற்றுக் கொண்டு (அதற்கேற்ற விலை தந்து) அருள் செய்வாயே.

62. அரு உருவாகக் கிரியை யாளர்களும் அருவமா யோகரும் மற்றை
உருவமாய்ச் சரியை அற்றிடுவோரும் ஒவ்வொரு படிப்பட வழுத்தப்
பெருகிய ஞானப் பெற்றியர் தமக்கே பேசரும் திருவடிக் கலத்தில்
அருள்புரி சோமநாதனார் பாகம் அண்ணிய தேவியே சரணம்.

<u>பொருள்:</u> சிவ வழிபாட்டில் சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்குபடி நிலைகள் உள்ளன. சரியை - உருவ வழிபாடு, கிரியை - அருவுருவ வழிபாடு (லிங்கத்திருமேனி), யோகம் – அருவ வழிபாடு (அகத்தால் தியானித்தல்), ஒவ்வொரு படிநிலையில் இருந்து ஞானம் பெற்றவர்களுக்கு மௌனமே வடிவான திருவடிகளை, கலம் - முக்திக்கு கரைசேர்க்கும் சாதனம், அண்ணிய - நெருங்கிய.

சரியை முறையில் உருவமாக ஈசனைக் கண்டு திருக்கோயில் தொண்டு செய்பவர்களுக்கும், கிரியை முறையில் அருஉருவாக ஈசனுக்கு (உருவம்) மட்டுமல்லாது எல்லோருக்கும் (எல்லோரிலும் ஈசனைக் காண்பது - அருவம்) தொண்டு செய்பவர்களுக்கும், யோக முறையில் ஆழ்ந்த தியானத்தின் (அருவம்) மூலம் வழிபடுபவர்களுக்கும், அவரவர் படிநிலையில் இருந்து,

பிறவிப் பெருங்கடலில் இருந்து முக்தி என்ற கரை சேர்க்கும் கப்பலைப் போன்ற விவரிப்பதற்கு அரிதான உன் திருவடிகளால், ஞானம் அருள் செய்த சோமநாதரின் இடது பக்கத்தில் இருக்கும் சோமசுந்தரித் தாயே உன்னை சரண் அடைகிறேன்.

63. சரண் மலர் தமிழால் வழுத்து சம்பந்தன் தமிழுனுக்கு அரையன் ஆருரன்
பெரு நலம் பொலியும் வாதவூர் எங்கோன் பின்னரும் பற்பலர் தமக்கும்
ஒரு பெரு முத்தி அளித்த சோமேசருடன் உறைந்து அருள்புரி உமையே
இரு வினைப் பட்டிங்கு உழலுவேன் தனக்கும் இரங்கி நீ அருளுவை இனிதே.

பொருள்: தமிழுக்கு அரையன் - தமிழுக்கு அரசன், நாவுக்கரசர், பெருநலம் - பெருமையை உடையதாகிய நன்மை, பொலியும் - விளங்கும்.

மலர் போன்ற பாதங்களைத் தமிழால் பாடும் ஞானசம்பந்தருக்கும், தமிழுக்கே அரசனாய்த் திகழும் நாவுக்கரசருக்கும், தோழமை பாராட்டிய ஆருரன் சுந்தரருக்கும், வாதவூர்க்கோன் மாணிக்க வாசகருக்கும், இவர்களுக்குப் பின்னால் தோன்றிய எத்தனையோ பெரியோருக்கும் கிடைத்தற்கரிய முக்தி அளித்த சோமநாதருடன் இடப்பாகம் இருந்து அருள் செய்யும் உமையே, நல் வினை, தீ வினை என்ற பந்தத்தில் சிக்கி அல்லல்படும் எனக்கும் மனமிரங்கி இனிதாக நீ அருள் செய்வாயே.

64. இனிதெனத் தனக்கென்று இயல்பொன்றும் இல்லா வெண்ணகரும் பசுக்களில்
ஒருவன்
தனியனாய் உற்றுப் பாசமேமிக்குத் தலைவனைச் சார்ந்திடாது அலைவேன்
கனியனாய் பாசம் கழற்றியே கழுவிக் கனைகழல் சார்பையே உதவி
தனியனாம் தன்மை அகற்றி ஆண்டருளத் தயை செயா ஆறை நாயகியே.

பொருள்: எண்ணகரும் - எண்ணுவதற்கு அரிய, அளவில்லாத, பசுக்கள் – உயிர்கள், கனியனாய் - கனிவு உள்ளவனாய், கருணையோடு, பாசம் கழற்றி – பாசமலங்களாகிய ஆணவம் கன்மம் மாயையை அகற்றி கழுவி, கனைகழல் - செறிந்த, எங்கும் நிறைந்த கழல்கள், சார்பு- புகலிடம், பற்றுக் கோடு, தனியனாம் - துணை ஒன்றும் இல்லாத, இவ்வுலகில் நாம் துணை என்று நினைப்ப தெல்லாம் பொய்; கடைசி வரை கூட வராது; சிவன் மட்டுமே இறுதி வரை உள்ள பெருந்துணை.

எத்தனையோ மனிதர்களில், தனக்கென்று நன்மையான குணம் ஒன்றும் இல்லாத நான் ஒருவன் தனிமைப் பட்டு, இந்த உலக பந்தத்தில் அகப்பட்டு இறவனைச் சார்ந்திடாது அலைவேன். இந்த உலக பந்தத்திலிருந்து என்னை கனிவோடு விடுவித்து தூய்மையாக்கி, உன் திருவடிகளில் என்னை சேர்த்து, இப்படி வேறு பட்டு நிற்கும் தன்மை மாற்றி என்னை ஆட்கொள்ள அன்புடன் அருள்வாய் ஆத்தூரின் சோமசுந்தரித் தாயே.

65. அகிலமும் தானாய் அளித்து அழித்துக் காக்கும் அன்னையே ஆறை அம்பதியில்
புகு புனல் வெள்ளச் சீற்றமது அடக்கிப் புரந்தருள் புரியும் நின் கருணை
மகிதலப் பரப்பில் அறிகிலார் உளரேல் மற்று அவர் மானிடர் அலரே
இகழ்தரத் தக்க மரம் செடி கொடியா எனப்படும் அசரம் ஆவாரே.

பொருள்: அளித்து அழித்துக் காக்கும் – தோற்றி, நிலைத்து, ஒடுக்கும், மகிதல - பூதல, பூமி, அசரம் - அசையாப் பொருள்.

எல்லா உலகத்தையும் தானாகவே படைத்தும், காத்தும், அழித்தும் அருள் செய்யும் அன்னையே, ஆத்தூர் நகரில், சீற்றத்துடன் புகும் வெள்ளத்தை அடக்கி காத்து அருள்புரியும் உன் கருணையை, இந்த உலகில் யாரேனும் அறியாமல் இருப்பார்களேயானால், அவர்கள் மனிதப்பிறவியே இல்லை. மனிதப் பிறப்பிலும் கீழான மரம், செடி, கொடி போல அசையா பொருளாகத் தான் இருப்பர்.

66. **வாருதற் கரிய ஞானமும் வகுத்து மற்றதை மருந்தென அடியார்**
தேருதற் குரிய தீக்கையும் வகுத்து சிவ முதலான பல்சமயம்
பாரினில் வகுத்து வகுத்த அச்சமயப் பற்றுற உயிர்களை வகுத்தே
ஆரருள் புரியும் தலைவியாய் ஆறை அமர்ந்தருள் இறைவியே ஓலம்.

பொருள்: வாருதற்கு அரிய - கொள்வதற்கு அரிய, வகுத்து – உருவாக்கி, மருந்து – பிறவிப் பிணியைத் தீர்க்கும் மருந்து, தேருதற்குரிய - தெளிவடைவதற்கு உரிய, தீக்கையும் - ஞானத்தைத் தந்து மும்மலங்களையும் அழிப்பது, தீக்கை மூன்று முறைகளில் ஆன்மீகக் குருவால் செய்யப்படும் - பார்வையால் (நோக்கு), ஸ்பரிசத்தால், மானச தீக்கை, அனைத்து சமயங்களுக்கும் தலைவி உயிர்களை ஒவ்வொரு சமயத்தில் ஈடுபடுத்தி அந்தந்த சமயக் கடவுளராக அருள் புரியும் தலைவி.

கிடைத்தற்கரிய ஞானத்தைப் படைத்து, அது தான் பிறவிப் பிணி என்னும் நோய் தீர்க்கும் மருந்து என்று அடியார்கள் அறிந்து கொள்ளும் வகை செய்து, அவர்களின் மன அழுக்கை நீக்கும் முறையும் (தீட்சை) சொல்லி, இந்த உலகினில் சைவம் போன்ற பல சமயங்களைப் படைத்து, படைத்த அந்த சமயங்களை பின்பற்றும் வகையில் உயிர்களைப் படைத்து, இவை அனைத்தையும் அளித்து அருள் செய்த தலைவியாய் ஆத்தூரில் அமர்ந்து அருள் செய்யும் இறைவியே உன்னை சரண் அடைந்தேன்.

67. **ஓலமிட்டு ஒருநாள் அலறிய வேழத்து உயிர் புரந்து அருளிய ஒப்பில்**
மாலவன் தங்காள் மகிடன் ஆருயிரை வெளவிய சூலி மாசூரன்
கோலமா மஞ்ஞையாக ஊர் செவ்வேள் குமரனைப் பயந்த தாயதனால்
காலனார் வருமுன் ஆறைநல் தாயே கடைக்கணித்து அருளுவாய் எனையே.

பொருள்: வேழம் - யானை, புரந்து - காத்து, வெளவிய - கவ்விய, கைப்பற்றிய, சூலி - சூலம் ஏந்தியவள், கோல - அழகிய, மாமஞ்ஞை - பெரிய மயில், பயந்த – ஈன்ற, கடைக் கணித்து - கடாட்சித்து, கடைக்கண்ணால் பார்த்து, கிருபைசெய்து.

அபயம் என்று ஓலமிட்டு அலறிய யானையின் உயிர் காத்து அருளிய ஒப்புவமை யில்லாத திருமாலின் தங்கையே, மகிஷாசூரன் உயிரைப் பறித்த சூலம் ஏந்தியவளே, மகாசூரனான சூரபத்மனை தன் வாகனமான பெரிய மயிலாக மாற்றிய சிவந்த வேல்களை உடைய முருகனை பெற்றத் தாயுமானவளே, என்னை எமன் கொண்டு போகும் முன் உன் கடைக் கண்களால் எனக்கு அருள் செய்வாயே ஆத்தூரின் சோமசுந்தரித் தாயே.

68. **எனது எனது என்னும் இயற்கை வாசனைகள் இதயம் விட்டு அகலுமாறு அருளித்**
தனை உணர் அறிவை நல்கி என் சிந்தைத் தற்பமது ஒழித்து அருள் புரிய
மனை உனை அல்லது யாரையும் அறியேன் ஆதலால் ஆறை எந்தாயே
தினை எனும் பொழுது முன்னடி மறவாத் திறம் எனக்கு உறுதியாய் அருளே.

பொருள்: இயற்கை – இயல்பாக எழுவது, வாசனைகள் – (மல சகவாசத்தால்உண்டாகும்) குணங்கள் தனை உணர் அறிவு – இறையையும், ஆன்மாவையும் உணரும் அறிவை, நல்கி - அருள்செய்து, தற்பம் - அகந்தை, மனை - துணை, தினை - மிகச் சிறிய.

எனது எனது என்று எண்ணும் இயல்பான குணங்கள் என் சிந்தையை விட்டு போகுமாறு அருள் செய்து, என் சிந்தையிலுள்ள ஆணவத்தை அழித்து, என்னை நானே அறிந்து கொள்ளும் மெய்யறிவைக் கொடுத்து அருள் செய்ய, உன்னைத் தவிர வேறு துணை அறியேன். ஆதலால் சோமசுந்தரித் தாயே, இமைக்கும் பொழுது கூட உன் திருவடிகளை என்றும் (உறுதியாக) மறவாத தன்மையை எனக்கு அருள் செய்வாயே.

69. அருவியாக் கண்ணீர் பெருக உன்னடியை அடிக்கடி நினைந்து நைந்துள்ளே
உருகிடும் அடியார் பாத தாமரைகள் உச்சிமேல் சுமந்து உனது அருளைப்
பருகுமாறு எண்ணிப் பற்பகல் கழித்தும் பலனுறல் கண்டிலேன் பாவி
திருகும் என் சிந்தை சீர்ப்படும் படியாய்த் திருத்துவாய் ஆறை எந்தாயே.

பொருள்: நைந்து - வருந்தி, திருகும் - மாறுபடும், திருத்துவாய் - சரிப்படுத்துவாய்.

அருவியாய் கண்ணீர் பெருக்கெடுத்து ஓட உன் திருவடிகளை எப்போதும் நினைத்து நினைத்து மனமுருகி வணங்கும் அடியார் பாத தாமரைகளை என் தலையால் தாங்கி உன்னுடைய அருளைப் பெறுமாறு எண்ணி பல நாட்களை கழித்தும் எந்த பலனும் கிடைக்க வில்லை. பாவியாகிய நான் திருந்தி என் சிந்தை சீர் படும்படி அருள் செய்வாயே ஆத்தூரின் சோமசுந்தரித் தாயே.

70. தாயொடும் தந்தை தாரம் சந்ததி தனமெலாம் கானல்
தோய மென்று எண்ணித் தொடக்குறாது அவற்றைத் துறந்தனர் அடைந்தனர் துறக்கம்
நாயனேன் யாவும் சதமென நினைந்து நாள் பல போக்கினேன் வாளா
தூய நல்லாறை சோமசுந்தரியே துணை எனக்கு உன் திருத்தாளே.

பொருள்: தனம் - செல்வம், தோயம் - நீர், தொடக்குறாது (துடக்குறாது) - நெருங்காது, துறந்தனர் - விட்டு விலகினர், துறக்கம் – சொர்க்கம், சதம் - நிலையானது, நிரந்தரம், வாளா - பயனின்றி, அலட்சியமாக.

தாய், தந்தை, மனைவி, குழந்தைகள், செல்வம் எல்லாமே கானல் நீரைப் போன்று நிலை இல்லாதவை என அறிந்து கொண்டு அவற்றைத் துறந்தவர், மோட்சத்தை அடைந்தனர். ஆனால் இவை எல்லாம் நிலையானவை என நினைத்து நாயைப் போன்ற நான் எல்லா நாட்களையும் வீணாகக் கழித்தேன். நல்ல வளங்கள் நிறைந்த ஆத்தூரில் சோமசுந்தரித் தாயே எனக்கு உன் திருவடிகளேத் துணை.

71. தாளை என் தலை சூடவே எனக்கு அளித்தாளை
வண்டுகள் தாம் ஒளிர் செங்கரத்தாளை
மாதுளம் பூவின் தனி நிறத்தாளை
ஆறைத் தலத்தில் கண்டேனரோ.

பொருள்: தாள் - திருவடி.

என் தலை மேல் தன் திருவடிகளை வைத்து எனக்கு அருள் செய்தவளை, வண்டுகள் தாமரை என நினைத்து மொய்க்கும் சிவந்த கரங்களை உடையவளை, மாதுளம் பூவைப் போன்ற சிறந்த நிறத்தவளை, ஆத்தூர் திருத்தலத்தில் காணலாமே.

72. அரவிந்தத்தில் அமர்ந்துறை மாதரும்
அரவிந்தம் தலை ஆக்கிய தேவரும்
பரவி எந்தம் பணி பணித்தாள் என
அரவிந்தம் முகிழ் ஆறையில் தேவியே.

பொருள்: அரவிந்தம் - தாமரை, அரவிந்தத்தில் அமர்ந்துறை மாதரும் - கலைவாணி இலக்குமி, அரவிந்தம் தலை ஆக்கிய தேவர் - பிரமன், திருமால், முகிழ் - அரும்பும், மலரும்.

தாமரைகள் பூத்து குழுங்கும் ஆத்தூரில் வாழ்கின்ற தேவியை, தாமரையில் வீற்றிருக்கும் சரஸ்வதியும், லட்சுமியும், தாமரையாகிய ஈசன் திருவடிகளைத் தலை மேல் தாங்கிய தேவர்களும் "எங்கள் பணிகளை ஏற்று ஆட்கொண்டாள்" என்று துதிக்கின்றனர்.

73. தேவி ஆறைச் சிவ பரையாள் சரண்
பூவிலே துணையாகப் பொருந்துற
வாலியார்க் கினியார் துணை வேண்டுமோ
பாவி நெஞ்சே பயம் எமக்கு இல்லையே.

<u>பொருள்:</u> ஆலி - பூதம், எமன்.

ஆத்தூர் தேவி சிவசக்தியின் பாத சரண மலர்களிலே துணையாகச் சேர்ந்திருப்பதால் வலிமையுடைய எமன் வரும் போது வேறு யாருடைய துணையும் தேவைப்படுமோ? பாவம் செய்த என்னுடைய நெஞ்சே! எமக்குப் பயம் இல்லையே.

74. இல்லை ஆறை இறைவி எம்பாலுறச்
சொல்லலாரும் துயர் என்றுமே இனி
கல்லல் செய்யும் கரணம் பொறியெலாம்
நல்ல ஆகும் நமன் பயம் இல்லையே.

<u>பொருள்:</u> சொல்லலாரும் - சொல்லமுடியாத, கல்லல் - குழப்பம், கரணம் - சித்தம் மனம் புத்தி அகங்காரம், பொறி - கண் காது மூக்கு வாய் மெய் முதலிய ஐம்பொறிகள், நமன் - எமன்.

ஆத்தூர் இறைவி எம் பக்கத்தில் இருக்கும் பொழுது, சொல்ல முடியாத துயரம் இனி எப்பொழுதுமே இல்லை. நம்மைப் பாவத்தில் ஆழ்த்தும் ஐம்பொறிகள்,மனம் முதலிய கரணங்கள் எல்லாம் நல்லனவே செய்யும். எமனைப் பற்றிய பயமும் இல்லை.

75. இல்லை விட்டுப் புறப்பட்டும் எண்ணிலா
வெல்லை கட்டித் திரியினும் எங்கணும்
மல்லல் மாநதி வாரி படியினும்
அல்லல் போக்குவது ஆறை எம் அன்னையே.

<u>பொருள்:</u> இல்லை - வீட்டை, எல்லை - வரம்பு, அவதி, மல்லல் - வளம்.

குடும்பத்தை பிரிந்தும், பல எண்ணிலா (வெவ்வேறு நம்பிக்கைக்கு ஏற்ப) தூய ஆடைகளை அணிந்து திரிந்தும், வளமை மிகுந்த பல புண்ணிய நதிகளில் புனித நீராடினாலும் தீராத பாவங்களை, ஆத்தூரில் எம் அன்னை சோமசுந்தரி தன்னை வணங்கினாலே தீர்த்து வைப்பாள்.

76. அன்ன மென்னடையார் இடர் என்செயும்
இன்னல் செய் பொருள் ஈட்டமும் என் செயும்
மன்னர் மா விகல் என்செயும் ஆறையின்
மின்னை வாழ்த்தும் விரதம் உள்ளாருக்கே.

<u>பொருள்:</u> அன்ன மென்னடையார் - அன்னம் போன்ற மெல்லிய நடையை உடைய பெண்கள், இடர் - பாதகம், இன்னல் - இன்னாது; இனியவை அல்லாதது, இகல் - பகை, மா - வலிய, மா விகல் - மா இகல், மின்னை - ஒளியை, பெண்ணை, விரதம் - நோன்பு.

ஆத்தூரில் வாழும் மின்னலைப் போல ஒளி உடையவளை, தினமும் வழிபடும் விரதத்தை மேற்க் கொண்டவர்களை, அன்னம் போன்ற மெல்லிய நடையை உடைய பெண்கள் ஏற்படுத்தும் துன்பங்கள், பொருளை மிகுதியாக சம்பாதிப்பதால் வரும் சங்கடங்கள், மன்னர்களின் வலிமையான பகை (கோபம்) ஆகியவையும் என்ன செய்ய முடியும்? (ஒன்றும் செய்யாது).

77. கேடில் ஆறைக் கிழவி திரிபுரை
பாடிலாப் பரை பாவியேன் உள்ளமும்
நாடி வந்து நலன் குடிகொள்வதால்
தேடி வந்து எந்தச் செல்வமும் பேருமே.

<u>பொருள்:</u> கேடில் - கேடு இல் - அழிவில்லாத, கிழவி - தலைவி, பாடிலா - பாடு இலா, பாடு - வேலை, கடமை, பரை - சிவசத்தி, அனைத்திற்கும்மேலானவள்.

அழிவில்லாத ஆத்தூர் தலைவியான திரிபுரசுந்தரி! துன்பம் இல்லாத சிவசக்தி! உன்னைப் பாவியாகிய என் உள்ளமும் நாடிவந்து நன்மைகளை ஏற்றுக் கொள்வதால் அனைத்து செல்வங்களும் என்னைத் தேடி வந்து சேரும்.

78. சேரலார் புரம் செற்ற எம் ஆதியை
சாரல் செய்யத் தவசு முன் ஆற்றிய
நாரணற்கு இளைய நாயகி ஆறையில்
காரணி இருக்கக் கவலை இல்லையே.

<u>பொருள்:</u> சேரலார் - சிவனை நினைக்காதவர்கள், திரிபுர அசுரர், புரம் - திரிபுரம், செற்ற - போரிட்டு அழித்த, ஆதி - சிவன், சாரல் - சார்ந்து இருக்க, காரணி - அனைத்திற்கும் காரணமாய் உள்ளவள்.

எல்லாப் பொருட்களுக்கும் மூலமாக உள்ள தன்னை வணங்காத அசுரர்களது மூன்று புரங்களையும் அழித்த சிவனைச் சேர்ந்து இருக்க, முன்னர் தவம் செய்த நாராயணரின் தங்கை, ஆத்தூரின் நாயகி இருக்க நமக்குக் கவலையே இல்லை.

79. இல்லம் ஆதி சதம் என நெஞ்சமே
தொல்லை மேவித் துயர் உறுகின்றது என்
கல்லை உந்தி இழிந்து கடும்புனல்
செல்லும் ஆறை நல்தேவி இருக்கவே.

<u>பொருள்:</u> இல்லமாதி - வீடு உறவு முதலிய போகப் பொருட்கள், சதம் - நிலையானது.

பெரிய பாறைகளைத் தள்ளிக் கொண்டு வரும் ஆறு பாய்கின்ற ஆத்தூரில் ("என் மனமாகிய கல்லைப் பெயர்த்து நல்வழி சேர்க்கும்" என்பது மறை பொருள்) நல்லருளைத் தரும் தேவி இருக்கும் பொழுது, வீடு முதலிய இவ்வுலக போகங்களை நிலையானவை என்று நினைக்கும் என் நெஞ்சம் தொல்லைகள் சூழ்ந்து துயரம் அடைவது என்ன விந்தை.

80. வேதம் ஆதி மிருதிகள் சொன்னவாறு
ஆதியாக அறத்தை வளர்த்தவள்
ஆதி ஆறையின் அம்மணி மெய்ப்புகழ்
ஒதினோயும் உயிர்ப்பிணி உண்மையே.

<u>பொருள்:</u> வேதமாதி - வேதம், அங்கம் முதலானவை, மிருதிகள் - ஸ்மிருதிகள், 'ஒதினோயும்' என்பதற்குப் பதிலாக "ஓதின் ஓயும்" என வாசிக்கவும், ஓது - செபம் செய், சொல், உயிர்ப்பிணி - உயிரின் நோயாகிய பிறவி.

வேதங்கள் ஸ்மிருதிகள் முதலானவற்றில் கூறியுள்ளபடி இந்த பிரபஞ்சம் தோன்றிய நாளிலிருந்தே அறங்களை வளர்த்தவள், பழமையான ஆத்தூரிலுள்ள இளமையான சோமசுந்தரியின் உண்மையான புகழைத் தினமும் ஓதினால் உயிர் மீண்டும் மீண்டும் பிறக்கும் நோய் நீங்கும் என்பது உண்மையே.

81. **உண்மைச் சிவ பணியாளரை ஓம்பிச் சுவையமுதம்**
வண்மைப்பட ஊட்டேன் முகம் மலர்ந்து ஓர் பொழுதேனும்
திண்மைப்பட்டு சிலை ஒத்தன மனமும் சிவவாறை
அண்மைப்படு தாயே அருள் பெறல் எப்படி யானே.

<u>பொருள்:</u> உண்மை சிவபணியாளர் - சிவ வழிபாட்டை (சரியை கிரியை யோகங்களை) சிவனின் மீது அன்பினால் (வேறு எந்த பிரதிபலனையும் எதிர்பாராமல்) செய்பவர்களை, ஓம்பி - பாதுகாத்தல், பேணுதல், சுவையமுதம் - அமுதம் போன்ற அறுசுவை உணவு, வண்மை - வளம், ஊட்டு - உண்ணச் செய், புகட்டு, திண்மை - வலிமை, உறுதி, சிலை - கற்சிலை.

என் மனம் கற் சிலை போல தெய்வ சிந்தனையின்றி கடினமாக இருப்பதால், எந்த பிரதி பலனையும் விரும்பாமல் சிவனின் மீது அன்பு கொண்டு தொண்டு செய்யும் அடியார்களைப் பேணி ஒரு முறையாவது முகமலர்ச்சியோடு, அவர்கள் மனம் நிறையும்படி அறுசுவை உணவு அளித்ததில்லை. சிவநகரான ஆத்தூரில் இருக்கும் அன்னையே! உன்னை அணுகி நான் எப்படி அருள் பெறப் போகிறேன்.

82. **ஆன் ஏறு உகந்து ஏறும் சிவகக் கொழுந்தை அணி ஆறைக்**
கோனைத் தினம் நினையேன் நினைப்பாரைக் குறிக்கொள்ளேன்
மானைப்பழி கண்ணார் உறவாடி மயல் கொள்வேன்
ஆனைக்கொரு தாயே அருள் பெறல் எப்படி இவனே.

<u>பொருள்:</u> ஆன் - பசு, ஆன் உகந்து - பசுவிலிருந்து வரக்கூடிய பால், தயிர், நெய் முதலிய ஐந்தும் அபிஷேகத்திற்கு விரும்பி, ஏறு - காளை, ஏறு உகந்து - காளையை வாகனமாகக் கொண்டு (கொடியிலும் இடபத்தைக் கொண்டு), சிவக்கொழுந்து - சிவச்சுடர், அணி - அழகிய, கோன் - அரசன், குறிக் கொள்ளேன் - இலக்காக அடையேன், மானைப் பழி - மானின் கண்களைப் பழிக்கக் கூடிய, கண்ணார் - கண்களை உடைய பெண்கள், மயல் - மதிமயக்கம், காமவிருப்பு, ஆனை - பிள்ளையார்.

பசுக் கூட்டங்களின் தலைவனான நந்தி வாகனத்தை விரும்பி ஏறும் சுடரான சிவனை, அழகிய ஆத்தூர் அரசனை தினமும் நினைக்க மாட்டேன்; நினைப்பவர்கள் பின் செல்ல மாட்டேன். மானின் கண்களைப் பழிக்கின்ற கண்களை உடைய பெண்களுடன் உறவாடி ஆசையில் வீழ்கிறேன். யானை முகம் கொண்ட விநாயகனின் அன்னையே! இப்படிப்பட்ட நான் எப்படி அருள் பெறப் போகிறேன்.

83. **இவனும் விடனாகித் திரிகின்றான் என விட்டால்**
புவனம் தனை அருள்கின்றவள் நீ என்பது பொய்யோ
புவனத்து உள உயிர்கட்குள்ளே பொருந்தும் இவன் ஒன்றே
கவனித்து அருள் ஆறைப்பதி காவல் புரிவாளே.

பொருள்: விடனாகி - தூர்த்தனாகி, பொருந்தும் - பயன்படத்தக்க, ஒன்றே - ஒருபொருளே.

ஆத்தூர் தலத்தைக் காவல் புரிகின்றவளே! இவன் தூர்த்தனாகி அலைகின்றான் என்று என்னை நீ கைவிட்டால், உலகத்திலுள்ளஉயிர்களுக்கு எல்லாம் அருள் புரிகின்றவள் நீ என்பது பொய்யாகி விடுமே. அந்த உயிர்களில் இவனும் ஒன்று என்றே நினைத்து எனக்கு அருள் புரிவாயாக.

84. வாளா இருள் வடிவாய் மனவஞ்சம் பழிபாவ
வாளாய்ப் பரதாரம் பொருள் ஆசைப்படு கொடியேன்
நீளு மதில் மேடை அரண் நிலவும் பொழில் ஆறை
ஆளும் பரதேவி இவன் அருள் பெற்று உயல் எவனே.

பொருள்: வாளா - பயனின்றி, இருள் - ஆணவ இருள், அறியாமை, மனவஞ்சம் - மனத்தில், கொடுமையோடு, பொய்யோடு, பழி பாவ ஆளாய் - குற்றம் செய்வதனால் ஏற்படும் பழியும், தீய செயல்களின் விளைவும் அறியாதவனாய், பரதாரம் - பிறன் மனைவி, பொருள் - பிறன்பொருள், நீளுமதில் - நீண்ட மதில், அரண் - பெரிய வெளிப்புறச் சுவர் உள்ளே இருக்கும் இருப்பிடம், நிலவும் பொழில் - நீண்ட மதில் போல உயரமான மரங்கள் வரிசையாக இருக்க உள்ளே சோலைகள் விளங்கும், பரதேவி - மேலான இறைவி.

நீண்ட மதில்களையும் உயரமான மரங்கள் நிறைந்த சோலைகளையும் உடைய ஆத்தாரை ஆட்சி செய்கின்ற சிவசக்தி தேவியே! என்னுடைய மனம் ஆணவ இருளோடு வஞ்சனை பழி பாவத்திற்கு ஆளாகிப் பயனின்றி உள்ளது. பிறன் மனைவியையும், பிறன் பொருளையும் ஆசைப்படுகின்ற கொடியவனாகிய நான் எப்படி அருள் பெற்று உய்யப் போகிறேன்.

85. எவணும் புயல் படியும் பொழில் எவணும் பல பழனம்
கிவணும் தமிழ் ஆறைப்பதி திகழும் வடிவாளே
யுவணம் வெவ் வெகினம் புவி உயர்வான் திரிந்து ஏய்த்து
ஙவணே அனல் வடிவாகிய வவனை மணந்தவளே.

பொருள்: எவணும் - எல்லா இடத்தும், புயல் - பருப்பொருளின் அமைதி குலைந்த நிலை, புயல் படியும் பொழில் - புயல் அடித்தாலும் பாதிப்பு அடையாதசோலைகள், பழனம் - வயல்கள், உவணம் - கருடன், வெவ்வெகினம் - வெண்மையான அன்னம், கருடனை வாகனமாக உடைய திருமால் பூமியின் கீழும், அன்னப் பறவை வடிவத்தில் பிரமன் வான்மீதும், எய்த்து - இளைத்து, அவணே - அவ்விடத்தில், அனல் வடிவாகிய அவனை - நெருப்பு வடிவமாகத் தோன்றியவனை.

கருடனை வாகனமாக உடைய திருமால் பூமியின் கீழ் அகழ்ந்தும், அன்னப் பறவை வடிவத்தில் பிரமன் வான் மீது உயரப் பறந்தும் அடிமுடி காண முடியாதபடி அவ்விடத்தில் தீப்பிழம்பாக நின்ற சிவனை மணந்தவளான சக்தியே, புயல் கூட நுழைய முடியாதபடி எங்குமுள்ள அடர்ந்த சோலைகளும், வயல்களும் , என்றும் இளமையான தமிழும் நிறைந்திருக்கும் ஆத்தூரில் வாழும் ஒளியாகத் திகழ்கின்ற சோமசுந்தரித் தாயே ஆவாள்!

86. அவனே அவள் அது என்பன ஆகும் உயிர் அனைத்தும்
சிவனே என அறியும் சிவஞானம் அருளாயே
அவனி முதல் வடிவு ஐந்துடன் அகல் விண்ணிரு சுடரும்
சீவனும் என வகுவெட்டுடன் வருமாறையின் சிவையே.

பொருள்: அவனி முதல் வடிவு ஐந்து - நிலம் நீர் காற்று நெருப்பு ஆகாயம் என்ற ஐம்பூதங்கள் விண்ணிரு சுடரும் - ஆகாயத்தில் ஒளிரும் சூரியன், சந்திரன், சீவன் - ஆன்மா, வகுஎட்டுடன் - அட்ட மூர்த்தியாக, சிவை - சிவசத்தி.

நிலம் முதலான ஐம்பூதங்கள், ஆகாயத்தில் ஒளிவிடும் சூரியன், சந்திரன் இவற்றுடன் ஆன்மா சேர்த்து அட்ட மூர்த்தியாகத் திகழும் ஆத்தூரில் வாழும் சிவசத்தியே! அவன், அவள், அது என்று அறியப்படும் உயிர்கள் எல்லாம் சிவனே என்பதை அறியும் சிவஞானத்தைஅருள்வாயாக.

87. வையந்தனி வழியும் பொருள் கருதித் தினம் வாடி
ஐயம் கொடு வயிறு ஓம்புதற்கு அனந்தம் கவிபாடி
நையும் சில நரரைப் புகழாதீர் சிவஆறைத்
தையல் கொடி சோமீச்சுரி தாளைப் புகழ்வீரே.

பொருள்: வையந்தனி வழியும் - வையம் தனில் அழியும், ஐயம் - பிச்சை, 'கொண்டு' என்பது "கொடு" என்று குறைந்து வந்தது, அனந்தம் - அளவற்ற, நையும் - வாடி வருந்தும், நரர் - மனிதர், தையல் - பெண்.

இந்த உலகத்தில் அழிகின்ற நிலையற்ற பொருட்களை அடைவதற்குத் தினம் ஏங்கியும், வருத்தப்படும் வகையில், பிச்சை பெற்று வயிறு வளர்க்க அளவற்ற கவிகளைப் பாடி, வாழும் மனிதர்களைப் புகழாதீர்கள். கொடி போன்ற பெண்ணான சோமசுந்தரியின் பாதங்களைப் புகழ்ந்து பாடுவீர்களாக.

88. புகழும் திருஆறைத் திரிபுரை சேவடி தொழுவார்
அகழும் கடல் சுழலும் புவி அமரும் இமையோரே
இகழும் குணம் பல பெற்றவர் எனினும் அவர் மேலாத்
திகழும் பதம் உடையார் என சிந்தித்திடும் உலகே.

பொருள்: திரிபுரை ஆகிய சோமசுந்தரி பாதங்களைத் தொழுபவர்கள் பிறரால் இகழப்படும் குணங்களைப் பெற்றிருந்தாலும் தேவர்களைவிட மேலானவர்களாகக் கருதப்படுவார்கள்.

ஆழமான கடல், சுழல்கின்ற பூமி ஆகியவற்றில் வாழும் தேவர்களால் புகழப்படும் திரிபுரை ஆகிய சோமசுந்தரி பாதங்களைத் தொழுபவர்கள், பிறரால் இகழப்படும் குணங்களைப் பெற்றிருந்தாலும் தேவர்களைவிட மேலானவர்களாகத் திகழும் தகுதி உடையவர்களாக இந்த உலகம் போற்றும்.

89. உலகத் தெளிர் மீனந்தொறும் உமைபங்கரின் சாறே
இலகக் கொடி ஏறும் பரிசிலகும் திருக்கோயில்
அலகைப் பொரு பிறைசூடியின் அங்கத்து ஒரு பெண்ணாய்
இலகும் கொடி சோமீச்சுரி இறை ஆறை நன்னகரே.

பொருள்: தெளிர் - ஒளி பெறும், மீனம் - நட்சத்திரங்கள், சாறு - உள்தன்மை, சாரம், இலக - இலங்க என்பது குறைந்து வந்தது, கொடி ஏறும் - இடபக்கொடியும், பரிசு - தன்மை, இலகும் (இலங்கும்) - விளங்கும், அலகு - குற்றம், பொரு - மாறுபடுத்தி, சந்திரன் குற்றத்தினால் பெற்ற சாபத்தைப் போக்கி.

களங்கம் நிறைந்த சந்திரனின் பிறையைத் தலையில் சூடிய சிவனின் இடப்பாகத்தில் அமர்ந்திருக்கும் பெண்ணான உமையே, நல்ல நகரமான ஆத்தூரில் இடபக் கொடி விளங்கும்

திருக்கோயிலில், உலகத்தில் ஒளிர்கின்ற நட்சத்திரங்கள் எல்லாம் அடங்குகின்ற சிவனின் இடப்பாகத்தில் உறையும் கொடியாகிய இறைவி சோமசுந்தரித் தாயாக இருக்கிறாள்.

90. நகமென்பன உலகுள்ளன நாணித் தலை கவிழ
விகலும் பனி ரசிதக் கிரி இறை எம்பெருமானார்
புகலும் பொழுது உமையோடமர் பொருனைக் கரைக் கோயில்
முகை விண்டிழி மதுவுண்டளி முரல் ஆறை அந்நகரே.

பொருள்: இகலும் - வலிமையான, ரசித - வெள்ளி, கிரி - மலை, முகை - மொட்டு, விண்டு - பிளவு, இழி - சிந்துகின்ற, மது - தேன், அளி - வண்டு, முரல் - பாடும்.

உலகிலுள்ள மலைகள் எல்லாம் வெட்கித் தலை குனியும்படி, இணையில்லாமல் உயர்ந்த வலிமையான, பனி படர்ந்து வெள்ளி போலத் திகழும் கயிலாய மலையில் இருக்கும் இறைவர் ஆகிய எம்பெருமான் விருப்பத்துடன் உமையுடன் அமர்ந்திருக்கும் கோயில் தாமிரபரணி நதிக்கரையில் மலர் மொட்டுகளில் இருந்து வழியும் தேனை உண்டு வண்டுகள் பாடும் ஆத்தூர் நன்னகரில் உள்ளது.

91. நகலொன்றுபட்ட தலை கொண்ட மாலை நால்கின்ற தோளர் மகிழ
மகவொன்று அரிந்த கறி கொண்டு அருத்த மனமுற்ற தொண்டு புரியேன்
தகவொன்று சோமவன நின்ற நாதர் தனமொன்ற வாழும் உமை தாள்
புகவொன்று அறிந்த வழியின்றி நிற்பல் புகலின்றி நிற்கும் நிலையே.

பொருள்: நகலொன்று பட்ட தலை கொண்ட மாலை - சிரித்தவாறு உள்ள தலைகளை மாலையாக அணிந்த, நால்கின்ற - அசைகின்ற, மகவு - மகன், அருத்த - உண்ணச் செய்ய, தகவு - அருள், தனம் - முலை, ஒன்ற - ஒன்று சேர, புகல் - அடைக்கலம்.

பற்களைக் காட்டிச் சிரிக்கும் கபாலங்களை கோர்த்த மாலை அசைகின்ற தோள்களை உடைய ஈசன் மனம் மகிழுமாறு, தன் குழந்தையை அறுத்து கறி சமைத்து உண்ணக் கொடுக்கும் (சிறுத்தொண்டர் போல) தொண்டும் நான் செய்த்தில்லை. சிறப்பு வாய்ந்த சோமவனம் எனும் ஆத்தூரில் இருக்கும் சோமநாத சாமியை தன் மார்பகங்கள் அழுந்த ஒன்றி வாழும் உமை திருவடிகளைச் சேர வழியறியாமல் நிற்கும் எனக்கு அடைக்கலம் தருவார் இல்லாமல் தவிக்கிறேன்.

92. நிலை கெட்டு உழன்று நெறி பற்றி நிற்கும் நினைவின்றி நாளும் உழல்வேன்
வலைபட்டு உழன்று வழி தப்பி ஓட வகையற்ற மானை நிகர்வேன்
சிலை தொட்டு மூன்று புரம் அட்ட தூயர் தென்னாறை முக்கண் இறைவர்
கலை தொட்டு இழுக்க மலைவுற்றிடாது கை தொட்ட கன்னி அருளே.

பொருள்: நெறி - மீண்டும் பிறவி வாராதநெறி; சிவநெறி, சிலை - வில், அட்ட - அழித்த, தூயர் - தூய்மையானவர்; இயல்பாகவே மலங்கள் இல்லாதவர், கலை -பார்வதி, மலைவின்றி - தடையின்றி, கன்னி - சோமசுந்தரி.

வில்லெடுத்து திரிபுரம் அளித்த தூயவரான தெற்கிலுள்ள ஆத்தூரில் உள்ள முக்கண் இறைவர் பார்வதியை நாடிச் செல்ல, சிறிதும் தயங்காமல் திருமணம் செய்து கொண்ட சோமசுந்தரித் தாயே, ஒரு நிலையில்லாமல் (குறிக்கோள் இல்லாமல்) வாழ்ந்து, மெய்யான சிவநெறியை பற்றிக்

கொள்ளும் சிந்தையும் இல்லாமல், வலையில் அகப்பட்டு தப்பி ஓட வழிவகை அறியாத மானைப் போல ஆனேன், எனக்கு அருள் செய்வாயே.

93. அருளுற்று நின்று மருளற்ற போதில் அறிகின்ற ஞான வடிவாய்த்
தெருளுற்ற வாழ்வு தரவுற்று நின்ற தென்னாறை வாழ் சிவையே
இருளுற்ற சிந்தை மிகவுற்று முத்தி எண்ணமற்று நிற்பன் எனினும்
பொருளுற்ற கோயில் தினமுற்று உருண்டு புரையற்று வாழ அருளே.

பொருள்: மருள் - மயக்கம், பயம், தெருள் - அறிவின் தெளிவு; உலக நியதிகளை மீறி வாழும் தெளிவு, இருளுற்ற சிந்தை - ஆணவ இருள் சூழ்ந்த சிந்தை; அறியாமை உடைய சிந்தை, பொருள் - மெய்மை, புரை - குற்றம்.

உன் அருளால் மயக்கம் தெளிந்த போது, ஞான வடிவமாகத் தோன்றி, தெளிந்த வாழ்வு தந்து, அருள் செய்த தெற்கிலுள்ள ஆத்தூரில் வாழும் இறைவியே, என் மனம் முற்றிலும் இருள் அடைந்ததால் முத்தி பெற வேண்டும் என்னும் எண்ணமில்லாமல் நான் இருந்தாலும், மெய்யான நீ இருக்கும் கோவிலுக்கு தினமும் வந்து வணங்கி என் துன்பங்கள் நீங்கி வாழ (பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யும் குற்றங்கள் இல்லாமல் வாழ) அருளாயே.

94. ஏதம் கெடுத்து நல்போதம் கொடுத்தவள் எம் ஆறை முக்கண் இறைவி
நாதம் கடந்து தற்போதம் தவிர்த்தவர் நான் என்பது அற்று ஞான
வேதாம் படிந்தவர் வேதம் பயின்றவர் ஓயாது நாடும் அன்னை
பாதம் பணிந்து பல்வாதம் தணிந்தவர் பரலோகம் எய்தும் அவரே.

பொருள்: ஏதம் - துன்பம், குற்றம், போதம் - ஞானம், நாதம் கடந்து - சிவனை அடைவதற்கு உரிய படிநிலைகளில் ஒன்றான நாதத்தைக் கடந்து, தற்போதம் - ஆணவம், தன் நினைவு, அவர் நான் என்பது, அற்று - அதை அவர் செய்தார், இதை நான் செய்தேன் என்று எண்ணாமல் எல்லாம் சிவன் அருளாலே நடப்பது என்பதை உணர்வது; அதனால் யார் மீதும் எதன் மீதும் விருப்பு வெறுப்பு ஏற்படாது, ஞான வேதாம் படிந்தவர் - இறை உண்மையை உணர்ந்தவர், பல் வாதம் தணிந்தவர் - சர்ச்சை, தர்க்கம் இல்லாமல் தவிர்ப்பவர், பரலோகம் - சிவலோகம், சிவபுரம்.

மன அழுக்கினை நீக்கி நல்ல ஞானத்தைக் கொடுத்தவள் எங்கள் ஆத்தூரில் வாழும் முக்கண் இறைவி. இந்த உலக வாழ்க்கையை வெற்றி கொண்டு நாதம் என்ற நிலையைக் கடந்து நாதாந்த நிலையில் நின்று தன் முனைப்பை (தான் என்ற அகந்தையை) அகற்றியவர், 'நான்' என்ற அகந்தையை அழித்து இறைவனை உணர்ந்து எல்லாம் ஈசன் செயலால் நடப்பது என்ற மெய்யறிவைப் பெற்றவர், வேதங்கள் பல கற்றவர்கள் எல்லோரும் எப்பொழுதும் நாடி வரும் அன்னை சோமசுந்தரியின் பாதங்களை (பலவிதமான குழப்ப சிந்தனைகளை விட்டு) சந்தேகம் இன்றி வணங்குபவர்கள் மோட்ச லோகம் அடைவார்கள்.

95. ஏதுக்கு ஞானம் ஏதுக்கு முத்தி என எண்ணி யாரும் இகழ
மாதுக்கு உழைத்து மயலுற்ற பாவ வாழ்க்கைக்கு உள்ளாகி மகிழும்
தீதுற்ற பாவர் உறவற்று வாழ சிவா என்று கூறுபவரே
மாதுற்ற சோமகுலவல்லி பாதமலர் உற்றிருப்பர் தினமே.

பொருள்: மயல் - மதிமயக்கம், காம விருப்பு, தீதுற்ற - தீமையுடைய; குற்றமுடைய, பாவர் - பாவிகள், மாதுற்ற - அழகு, பெருமையுடைய.

ஞானம், முத்தி இதெல்லாம் எதுக்குத் தேவை என்று எல்லோரும் இகழும்படி, பொருள் ஈட்ட பாடுபட்டு, ஆசை பெருகி வாழும் பாவ வாழ்க்கையை, மகிழ்ச்சியாக வாழும் கொடிய பாவிகளின்

தொடர்பில்லாமல் வாழ வேண்டி நமசிவாய என்று கூறுபவர்கள், சிவனின் இடபாகம் கொண்ட சோமசுந்தரியின் பாதங்களை தினமும் வணங்கி இருப்பர்.

96. தினைத் துணைப் பொழுதும் சிருனெனும் மொழியைச் சிந்தித்துத் தூயநீறு அணியார்
பனைத்துணைச் செல்வம் பல கல்வி ஞானம் படைத்துளார் எனினும் மன்னாரை
இனத்துணையாகக் கருதிலீர் கானத்து இருக்கும் மாவேங்கையாய் நினைமின்
மனத்துணையாக ஆறைவாழ் தேவி வந்துளே குடிகொளும் மதித்தே.

பொருள்: தினைத் துணை யேனும் - சிறிய பொழுதிலேனும், சிருன் - சிவன், பனைத் துணை - மிகப் பெரிய, அன்னாரை - அப்படிப் பட்டவர்களை (செல்வம் கல்வி ஞானம் பெற்றவராயினும் சிவனை நினைக்காதவர்கள்), இனத் துணை - சிறந்த துணை, கானத்திருக்கும் மாவேங்கை - காட்டில் இருக்கும் கொடிய புலியைப் போல்.

ஒரு நொடிப் போதும் "சிவசிவா" என்னும் மந்திரத்தை ஓதி தூய திருநீறு அணியாதவர்களிடம், மிகுந்த செல்வம், மிகுந்த கல்வியறிவு இருந்தாலும் சிறந்த துணையாகக் கருத முடியாது. அவர்கள் காட்டில் வாழும் கொடிய விலங்கைப் போன்றவர்களாகக் கருத வேண்டும். அப்படி நினைப்பவர்கள் மனத்துணையாக மதித்து ஆத்தூரில் வாழும் சோமசுந்தரித் தாய் நீங்காமல் குடியிருப்பாள்.

97. மதியைக் கெடுத்து வளர்கின்ற ஆசை மலைவிக்க நாளும் உழலும்
விதியைக் கெடுத்து உன் பாதாரவிந்தம் மேவுக்கிடக்கும் வரமே
பதியில் சிறந்த நதியுற்ற ஆறை பவளம் பழுத்த சடையில்
குதியுற்ற கங்கை முடியுற்ற மன்னர் குடியுற்ற தேவி அருளே.

பொருள்: மலைவிக்க - மயக்கமாக, தடையாக இருக்க, பாதார விந்தம் - பாதத் தாமரைகள், மேவிக் கிடக்கும் - தடவிக் கிடக்கும், பவளம் பழுத்த சடை - செஞ்சடை.

இவ்வுலகில் சிறந்த பொருநை நதி பாயும் ஆத்தூரில், பவளம் போல் சிவந்த சடையில் கங்கையை சூடிக்கொண்ட சிவனிடம் குடி கொண்ட சோமசுந்தரித் தாயே, என் சிந்தையை பாழாக்கி வளர்கின்ற ஆசைகளை அழித்து, தினமும் துன்பப் பட்டு வாழும் விதியை மாற்றி, உன் திருவடிகளில் வீழ்ந்து கிடக்கும் வரத்தை அருள்வாயே.

98. தேவிக் களித்த பாகத்தர் எங்கள் சிவ சோமநாதர் நதியில்
தாவிக் குதித்து வயல் வாளை சோலை தாதைக் கவிழ்க்கும் அதுபோல்
ஆவிக் குகந்த அருளைக் கவிழ்க்கும் மனை அங்கயற்கண் எனவே
சேவிக்க வந்த ஏழைக் குகந்த திறன் நன்கு அளிப்பள் இனிதே.

பொருள்: தாது - பூவிலுள்ள மகரந்தம், கவிழ்க்கும் - ஒழுக விடும்; வெளிப்படுத்தும், ஆவிக்கு உகந்த - உயிருக்குத் தேவையான, அருளை கவிழ்க்கும் - அருளை வெளிப்படுத்தும், உயிர் பக்குவம் (மலபரிபாகம், இருவினை ஒப்பு) அடைந்த பின் திருவருள் சக்தி வெளிப்பட்டு சிவனிடம் கொண்டு சேர்க்கும். சேவிக்க - வழிபட, திறன் - ஆற்றல்.

பொருநை நதியில் வயல்களில் தாவிக் குதிக்கும் மீன்கள் அருகிலுள்ள சோலைகளில் உள்ள மலர்களில் பட்டு தேனை சிந்த செய்யும். அது போல, நாங்கள் வணங்கும் தன் இடப்பாகத்தை தன் மனைவிக்கு கொடுத்த சிவனான சோமநாதரின் மனைவியான சோமசுந்தரி, தன் மீன் போன்ற கண்களால் அருளைச் சிந்தி, தன்னை வணங்க வந்த அடியவருக்கு தேவையான மிகுந்த வரங்களைத் தருவாள்.

99. இனிதாக எந்தை சோமேசரோடும் எழில் ஆசனத்தில் உறையும்

கனியே எமக்கு உன் அருளன்றி வேறு களை கணம் கொண்டு மறியேம்
எனவே நினைந்தும் உருகிக் கரைந்தும் இருகண் நீர் மார்பில் ஓட
தனியே இருந்தும் கலையாத நிட்டை சாதிக்கின் முத்தி எளிதே.

பொருள்: கனியே - கனிவானவளே, களை கணம் - பற்றுக்கோடு, ஆதாரம், நிட்டை சாதிக்கின் - ஞானத்தின் நான்காவது படிநிலை நிட்டை (கேட்டல், சிந்தித்தல், தெளிதலுக்குப் பின் நிட்டை கூடல்).
எந்தை சோமநாத சாமியுடன் எழுந்தருளியிருக்கும் இனிதான (ஞானக்) கனியே, எங்களுக்கு உன்னுடைய அருளை அன்றி கரை சேர வேறு ஏதும் பற்றுக் கோடு இல்லை. இரு கண்களிலும் கண்ணீர் பெருக்கெடுத்தோட தனிமையில் இருந்து உன்னை நினைந்தும், உருகிக் கரைந்தும், என்றும் கலையாத தவத்தை மேற்கொண்டால் முக்தி அடைவது உன் அருளால் எளிதே.

100. எளிதாக முத்தி தரும் ஞானம் எய்தி இனி வந்தாரன்னைக் கருவில்
உளையாது பின்னர் இறவாது முத்தர் உறுமாறு பேணி உதவும்
இளையாத சோமவனநாதர் தேவி பாதமலரில்
அளையாது வண்டு நுழையாது பொங்கி அமுதாக ஊறு தேனே.

பொருள்: இனி வந்து ஓர் அன்னை கருவில்உளையாது - மீண்டும் பிறவாது, உளையாது - முடங்காது, இளையாத - இணையற்ற, ஒப்புமை இல்லாத, அளையாது - கூடி இருக்காது (வண்டு).

மீண்டும் மீண்டும் அன்னையின் கருவில் பிறந்து பின்னர் இறந்து போகுமாறு இல்லாமல் முக்தி அடையுமாறு என்னைக் காத்து அருளும்படி, முக்தி தரும் ஞானத்தை எனக்கு எளிதாக (விரைவாக) அளித்து, மொய்க்கும் வண்டுகள் நுழையாமலேயே தேனைச் சிந்தும் மலர் போல, ஈடு இணையில்லாத சோமவனநாதரின் தேவி தன் பாதமலர்களால் கேட்காமலேயே அமுதம் போன்ற அருளை (சிந்தும்) அளிப்பாள்.